# வாழ்க்கைக்கு ஒளி தரும் வள்ளுவம்

தமிழண்ணல்

# வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம்

தமிழண்ணல்

விற்பனையுரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை-625 001

முதற் பதிப்பு : டிசம்பர், 2000

உரிமை : நூலாசிரியரின் மக்களுக்கு

**விலை : ரூ. 15.00**

## நூலைப் பற்றி

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம் |
| ஆசிரியர் பெயர் | : தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : திருக்குறள் விளக்கம் |
| முதற்பதிப்பு | : டிசம்பர், 2000 |
| தாளின் தன்மை | : வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : *18 x 12.5* செ.மீ. |
| மொத்தப் பக்கம் | : 68 |
| நூலின் விலை | : **15.00** |
| அச்சிட்டோர் | : ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி |
| ஒளி அச்சுக் கோர்வை | : ஐ கேட்சர், மதுரை - 7. |

---

## சிந்தாமணிச் செல்வ வெளியீடு

<u>திருக்குறள்நெறி பரப்புநர்</u>

**இராம. நாகப்பன்**
**பா. அம்மையப்பன்**

**திருக்குறள் ஊழியம்**
**4, இலூர்து நகர் 7ஆம் தெரு**
**கோ. புதூர், மதுரை 625 007**
**பேசி எண் : 562340**

# வாழ்க்கைக்கு
# ஒளிதரும்
# வள்ளுவம்

## திருக்குறளில் சில புதிய வெளிச்சங்கள்

திருக்குறள் வாழ்வு நூலாக வேண்டும்; செயல் நூலாக வேண்டும் என்று பொழியாத மேடையில்லை; கூறாத அறிஞர் இலர்.

அது எப்படிச் செயல் நூலாகும்? எவ்வாறு அதை வாழ்வு நூலாக்குவது? இதனை யாரும் விரிவாக விளக்குவதே இல்லை.

**திருக்குறள் மூலத்தைப் பொருள் முழுவதும் விளங்கிக்கொண்டு ஓதவேண்டும். ஓதிக் கொண்டே இருந்தால் அது செயலுக்குத் தூண்டும். மனம் சார்ந்ததன் வண்ணமாகும் என்பது சிவனிய மெய்ம்மை மட்டுமன்று; அஃதோர் உளவியல். ஆனால் அதுமட்டும் போதாது. வேறு பலவும் எண்ணிப் பார்க்க வேண்டும்.**

எந்த எந்தக் குறளை எவ்வாறு பின்பற்ற வேண்டும்; யார் யார் எவ்வெக் குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்துள்ளார்கள் என எடுத்துக் காட்ட வேண்டும். வாழ்வில் சிக்கல் நேருமிடத்தில், வள்ளுவம் ஒளிகாட்டும் கைவிளக்காக, வழிகாட்டுமிடங்களை அவ்வக் குறளைச் சுட்டிக்காட்டித் தெரியாதவர்க்கு உணர்த்த வேண்டும்.

**ஆட்சியியலில் - ஆள்வினையில்** வள்ளுவர் காட்டுவன, அவ்வுயர்கல்வியாளர்க்குப் (M.B.A., B.B.A.,)

பாடமாக வைக்கப்படவேண்டும். தமிழகப் பல்கலைக் கழகங்கள், பாடநூல் வல்லுநர்கள், உயர்கல்வியாளர்கள் இதைச் சிந்திப்பதே இல்லை. ஆனால் இந்தப் 'போலிகள்' மேடையேறிப் புகழ்வதற்கோ, புகழ்ந்து பாராட்டும் பரிசும் பெறுவதற்கோ அளவே இல்லை.

**பழகும் பண்பாடு** மேம்படுத்தல் பற்றி (Development of Human Relationship) நூற்றுக்கணக்கான குறள்கள் உள. அவை தனியே தொகுத்து, பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களிலும் உலக நடப்புக்களிலுமிருந்து மேற்கோள் காட்டப்பட்டு, ஒரு கோட்பாடு (Theory) போல வகுக்கப்பட வேண்டும். மக்களுக்குப் போய்ச்சேருமளவு விளக்கப்படவேண்டும். மாணவர்க்கும் பாடமாக வைக்கப்பட்டுப் போதிக்கப் பட வேண்டும்.

இல்வாழ்க்கை, ஆண்பெண் உறவு, பாலியல் உளவியல் - இவை பற்றி நன்கு விளக்கப்படுதல் வேண்டும்.

**'பிறன்இல் விழையாமை'** என்ற அதிகாரம், இன்று மீண்டும் மிகமிகத் தேவைப்படுவதை எண்ணிப் பாருங்கள். பெண்கள் அனைவரும் வேலைக்குப் போவதால், பிற ஆடவர்களுடன் பெரும் பொழுது கழிவதால் கலந்து பழகவேண்டிய வேலை தொடர்பான சூழல்கள் மிகுவதால் **'பிறன் மனைவியை விரும்பாதே'** என்ற போதனை இன்று மிகவும் தேவைப்படுகிறது. அவ் அதிகாரக் குறள் ஒவ்வொன்றும், இன்றைய அலுவலக அதிகாரிகள், மேலாளர்கள், உடன்பணிபுரிவோர் அனைவருக்கும் போதிக்கப்பட வேண்டுமெனத் தோன்றுகிறது.

**துறவு, தவம்** பற்றிய வாழ்வு எங்ஙனம் அமைதல் வேண்டும்? திருவள்ளுவர் கூறும் துறவு, தவம், வேள்விகள் யாவை?

உணவே மருந்தாவது, அல்லது இயற்கை மருத்துவ அடிப்படைகள் யாவை? மனிதர்க்கு வகுத்த மருத்துவக் கையேடு அல்லவா அது?

அறநெறி வாழ்வு வெற்றி தருமா? இன்று 'அறக் கேடர்கள்', 'ஊழல் பெருச்சாளிகள்' கொடிகட்டிப் பறக்கின்றனரே? அவர்கள் நுகர்வன உண்மையில் இன்பம்தானா? 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதை, ஆயிரம் நடைமுறை வாழ்க்கைக் குறிப்புக்களில் வைத்து விளக்க வேண்டாவா?

பகைகளை வெல்வது எவ்வாறு?

ஒருவன் தன்னைத்தானே முன்னேற்றிக் கொள்ளும் வழிகள் யாவை? தன்னம்பிக்கையூட்டும் குறள்கள் யாவை?

இன்று உலகெங்கும் மனித உரிமைக் கழகங்கள் தோன்றித் தொண்டாற்றுகின்றனவே? வள்ளுவம் சொல்லும் 'மனித நேயம்' 'மானுடமாண்புகள்' யாவை?

நிலைபேறான விழுமியங்கள் (Eternal Values) யாவை?

திருக்குறளுக்கு உரை எழுதினாற் போதுமா? திருக்குறளுக்கு மாநாடு, கருத்தரங்கம் நடத்தினால் அது செயல் நூலாகிவிடுமா? அவை வேண்டும்தான். ஆனால் அதற்கு மேலே என்ன?

தமிழின் பெருமையைப் பற்றி ஆண்டு பலவாகப் பேசிப்பேசியே மகிழ்கிறோம். ஆனால் தமிழை இரண்டாம் தர, மூன்றாம்தர நிலையைவிட்டு முதல்நிலைக்குக் கொண்டுவர, ஓர் அங்குலமேனும் நகர்த்த முடிகிறதா?

திருக்குறள் சமயங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு திருநெறி. குறள் வழி வாழ்வு இன்றைய மூட நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டது. எனவே **'குறள் வழி வாழ்வியல்'** என ஒரு கையேட்டை உருவாக்க வேண்டும். அது உலகத் தமிழரனைவரும் ஒப்பும்படியும் இருக்கவேண்டும். முதலில் நம் திருக்கோயில் வழிபாடுகளே மாறவேண்டும். இவை நடக்கக் கூடியனவா?

திருக்குறளுக்கான உரையும் விளக்கமும் ஆய்வும் கைவிளக்காக மட்டுமே பயன்படும். கைவிளக்கு பொருளிருக்குமிடத்தைக் காட்டும். பொருளைக் கண்டெடுக்கும்வரை விளக்கொளி பயன்படும். பயன்பட்டபின் பொருள்தானே முக்கியம். விளக்கொளியை அடித்தடித்து விளையாடுவது சிறுபிள்ளைகள் செயலல்லவா?

**'வாழ்வியல் கையேடு'** – சட்ட வரையறை நூல் போல, தலைப்பு எண்ணிட்டு அமைவதுடன், ஒவ்வொரு விதிக்கும் குறள்எண் தரவேண்டும். இந்த இயல், இந்த விதிப்படி நட அல்லது நடவாதே என்று வினவும்படி அமைதலே தக்கது.

திருக்குறளை வாழ்வியல் நூலாக்குவது பற்றி, இன்னும் நிரம்ப எண்ணிப் பார்க்கவேண்டும். மேலும்

மேலும் நினைத்துப் பார்க்க வேண்டும். பலரும் முயல வேண்டும்.

இந்நூலாசிரியர் இதே சிந்தனையுடன் பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய **நுண்பொருள் உரை** தமிழ்ப்பண்பாட்டுப் பின்புலம், சங்க நூல்கள், தொல்காப்பிய அடிப்படை மற்றும் குறளுக்குள்ளேயே குறளுக்கு உரைதேடுதல் என்ற பாங்கில் அமைந்தது. இவரது **'திருக்குறள் கற்கும் நெறிமுறைகள்'** என்ற நூலாலும் இதில் தெளிவுபடலாம். **திருக்குறள் நோன்பு** என்பதும் குறளை வாழ்வு நூலாக்கும்.

முற்பட்ட பல சமய நூல்களும் அறவுரைகளும் எல்லாமிருந்தாலும், திருவள்ளுவர் அவற்றின் வேறுபட்டுத் தெளிவுபட வரையறுத்துச் சொல்லும் முறைதான் திருக்குறளை உலக நூல்களிலேயே சிறந்த நூலாகத் தூக்கி நிறுத்துகிறது.

உலகச் சிறந்த நூல்கள், சிறந்த நூல்களின் சாரத் தொகுப்புக்கள், உலகை மாற்றியமைத்த நூல்கள் எனப் பல பட்டியல்களையும் தொகுப்பு நூல்களையும் (Anthology of World Classics; The books that which have changed the world etc.) தேடினால், அதில் திருக்குறள் பெயர்கூட இடம்பெறாதிருப்பதைக் காண்பீர்கள். அந்த அளவு இன்னும் நாம், உலக அறிஞர்களுக்கு இத்தமிழ் மறையின் அருமை பெருமைகளை அறிவித்தோமில்லை. ஐரோப்பியப் பாதிரிமார்கள் வந்தார்கள்; அவர்களாகப் படித்தார்கள்; புகழ்ந்தார்கள். இவற்றைச் சொல்லிச் சொல்லியே ஓய்ந்து போகிறோம். இது முறையா?

திருக்குறள் சிறந்தது, சிறந்தது என்று கூறுகிறோம். முக்கிய சிறப்புக்களை வரிசைப்படக் கூறுங்கள் என்றால், காரண காரியத்தோடு நாம் சொல்லவேண்டாமா?

நம்மில் எத்தனைபேர் அதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்? **ஒரு பொருளைச் சிறந்தது என்று சொல்லாதே; அதில் என்ன சிறப்பிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்** என்பது ஒப்பிலக்கியக் கோட்பாடு.

இப்போது நாம் திருக்குறள் எவ்வெவற்றைப் **'புதுமை'** எனப் போற்றுமாறு விளக்கிச் சொல்கிறது என்பதை இங்கு எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கமாகக் காண்போம். இவ்வாறு விளக்கும்போது, சிலர்க்கு வியப்பு ஏற்படும். திருவள்ளுவர் **'தேடல்'** உத்திக்கு வழிவகுத்துள்ளார் என யாம் அடிக்கடி கூறுவது உண்டு. அதனால் நாம் ஒவ்வொருவரும் ஒரே குறளுக்கு வெவ்வேறு விதமாகப் பொருள் கூறியும் மகிழ்கிறோம். 1330 அருங்குறளையும் இயைத்துப் பார்க்குமாறு **இயைபு படுத்தல்** உத்தியையும் வள்ளுவர் பயன்படுத்துகிறார். அவ்வாறு இயைபுபடுத்திப் பார்க்கும்போதுதான் வள்ளுவர் உள்ளம் தெள்ளத் தெளிவாகப் புலனாகிறது.

**அதிகார முதற்குறள்கள்**

சில அதிகார முதற்குறள்கள், ஏதேனும் ஒரு விதத்தில், அவ்வதிகாரப் பொருளின் **புதிய விளக்கம்** ஒன்றைச் சொல்வதுபோல் இருக்கும். அது புதுமையானதாக மட்டுமன்றி, திருக்குறளுக்குரிய தனித்தன்மையுடன் காணப்படும்.

திருவள்ளுவர் தனக்கேயுரிய கருத்தையும் கூறுவார்; பிறர்க்கு உரியவற்றில் ஏற்கக் கூடியதையும் கூறுவார்; பிறர் கருத்தை மறுக்காமலே மடைமாற்றுவார்; பிறர்தம் கூற்றுக்களை அடியோடு மறுக்கவும் செய்வார்.

**எனவே (1) திருவள்ளுவருக்கு உடன்பாடான, அவருக்கே உரிய கருத்து (2) அவருக்கு உடன்பாடில்லாமலிருந்தாலும் புறனடையாகச் சில திருத்தத்துடன் அவர் ஏற்கும் கருத்து (3) அவர் முற்றிலும் ஏற்காது மறுக்கும் கருத்து என மூன்றாகப் பகுத்து இனம் காணவேண்டும்.**

இந்நெறிமுறை, முற்றிலும் தமிழர் நாகரிகப் பண்பாட்டை, நிலைநிறுத்தவும், அயற்பண்பாட்டுப் படையெடுப்பை - மடைமாற்றவும் அல்லது மறுத்து ஒதுக்கவுமென அவரால் கடைப்பிடிக்கப்படுகிறது. இத் தெளிவிலாதார், திருக்குறளுக்கு எழுதும் விளக்கமெல்லாம் வீணேயாகும்.

## ‘அன்பு’ எது?

அன்பு என்பது நுண்பொருள். அதைக் காட்ட முடியாது. அதை எவ்வாறு உணர்த்துவது? ஒருவரது உள்ளத்திலிருக்கும் அன்பை வெளிப்படக் காட்ட வேண்டும். எவ்வாறு காட்டுவது? இவரிடம் அன்புளது என்றால் போதுமா?

**‘அன்பு’** என்பதைப் படம்போட்டுக் காட்டுக; ஒரு படம் - ஓவியம் வரைந்து, அதன்கீழ் ‘அன்பு’ என எழுதவேண்டும். இவ்வாறு ஒரு போட்டிவைத்தால் தாயும்

குழந்தையும், ஆவும் கன்றும் என நூறுவகையாக ஓவியம் வரைந்து, கீழே 'அன்பு' என எழுதி அனுப்புவர்.

திருவள்ளுவர் உண்மையான 'அன்பு' என்ற நுண்பொருளை, ஒரு பருப்பொருள் வாயிலாகக் காட்சிப் படுத்தி, இதுதான் 'அன்பு' எனச் சொல்வதில், சொல்லவொண்ணாப் புதுமை உளது.

அன்பு உள்ளிருந்தால் அதை மறைக்க முடியாது. அதைச் சோதனைக் கூடத்தில்போல, ஆய்ந்தறியக் கூடிய இடம் ஒன்றை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். **ஒரு குழந்தை துன்புறுவதைப் பார்த்தால், பெற்றதாயின் கண்களில் தன்னை அறியாமல் நீர் பெருகும்.** அந்தக் 'கண்ணீர்', அன்பு எனும் அருவப் பொருளைக் கண்கூடாகக் காட்டும் 'பருப்பொருள்' ஆகும். கட்புலனாகாத அன்பைக் காட்சிப்படுத்தும் திறம் இது:

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்** (71)

ஆர்வலர் - அன்புக்குரியார். புன்கண் - அவரடையும் துன்பம். நீர் - அத்துன்பம் கண்டதும் அன்பு செய்பவர் கண்களில் வழியும் நீர். அந்தக் கண்ணீர் 'பூசல்' தரும் - தான் அன்பின் வெளிப்பாடு என்பதை, மறைக்காமல் உலகிற்குப் புலப்படுத்திவிடும். பெரிய புராணத்தில் பூசலார் நாயனார் என்பவர், மனத்தினாலேயே இறைவனுக்குக் கோயில் கட்டித் தம் உண்மையன்பை வெளிப்படுத்தினார். அன்பு உள்ளிருக்குமானால் அதைத் தாழிட்டு அடைக்கவோ, மறைக்கவோ முடியாது.

## இன்சொல்லின் இலக்கணம்

இவ்வாறு அன்பைக் கண்டுகொள்ள வழிசொன்னவர் இன்சொல்லுக்குப் புதிய முறையில், ஒரு பொருள் விளக்கம் தருகிறார். 'இன்சொலால்' எனத் தொடங்குகிறார். அதற்கு 'இன்சொல் என்பது எதுவென்றால்' என்பது கருத்து. அதாவது நான் இன்சொல்லுக்குப் புதிய பொருள் அல்லது இலக்கணம் சொல்லப்போகிறேன் என்று தொடங்குகிறார். அகராதிப் பொருள் சொல்வது போல் மொழிநடை உளது.

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (91)**

ஈரம் அளைஇ - ஈரநெஞ்சமாய் அன்புடன் கலந்திருக்க வேண்டும். படிறு இலவாம் - வஞ்சனையற்றனவாக இருக்க வேண்டும். உலகில் வஞ்சனையுடையவர்களே மிக அன்பாக இனிக்கப் பேசி ஏமாற்றுகின்றனர். அது அன்பாகாது என்பதற்கே படிறு (வஞ்சனை) இலவாம் என்றார். இவை இரண்டும் போதா. சொல்பவரும் நல்லவராக இருக்க வேண்டும். மெய்ம்மைப் பொருளை அறிந்த சான்றோராய் இருக்க வேண்டும். அவர்கள் வாயிலிருந்து வருவனவே இன்சொற்கள். இனிமை சொல்லில் மட்டுமில்லை; சொல்பவனைப் பொறுத்துமுளது. செம்பொருள் (உண்மைப் பொருள்; உலக மெய்ம்மைகள்) கண்ட, சான்றோர்கள் வாயிலிருந்து கூறப்படும் அறிவுரையும் அறவுரைகளுமே இனிய சொற்களாகும் - அதாவது மனித வாழ்க்கைக்கு இனிமை சேர்க்கும் சொற்களாகும் என்னும் இந்த விளக்கம் சற்று வேறுபட அமைந்த, தனித்தன்மையுடையது.

## ஒப்புரவும் ஈகையும்

ஒப்புரவு என்ற சொல், திருவள்ளுவர் முதன்முதலாக ஆளும் சொல். அதனோடு தொடர்புபடப் பேச்சு வழக்கில் இருந்திருக்கலாம்.

நல்குரவு, தாக்குரவு, ஒப்புரவு - என எண்ணிப் பார்த்தால் 'உரவு' - தொழிற்பெயரொட்டாகவே உளது. **ஒப்பு - சமத்துவம்; எல்லோரும் ஒருதன்மையராய் - சரி நிகர் சமமாய் வாழ்தல்** எனலாம். ஓரிடத்தில் செல்வம் குவியாது, அது பலருக்கும் பயன்படச் செய்தல். மேடும் பள்ளமுமாகாமல், பொருளாதாரச் சமத்துவம் பற்றிய சிந்தனையில் முகிழ்த்த சொல்லாகப் பயன்படுகிறது. உலகநடையை அறிந்து, அதற்கேற்பக் கொடுத்து வாழ்தல் எனும் உரையாசிரியர் விளக்கங்களும் ஒருவர் சேர்த்த செல்வம் ஊருணி, பழமரம், மருந்து மரம்போலப் பலர்க்கும் பயன்படவேண்டுமென்று இவ்வதிகாரத்தில் வரும் விளக்கங்களும் உலகிற்குப் பள்ளி, மருத்துவமனை போலப் பொது நல அறங்கள் செய்தல் என இக்கால ஆய்வாளர் கூறுவனவும் எண்ணிப் பார்க்கத் தக்கன. சுருங்கச் சொன்னால் வள்ளுவர் கண்ட, அறவழிப்பட்ட 'சோசலிசம்' இது. உலக நடப்பை அறிந்து, அவ்வப்போது அங்கங்கு செய்யப்படும் பொதுநலப் பணிகள் அனைத்தும் இதில் அடங்கும்.

'ஈகை' வறியவர்க்குக் கொடுப்பது; வாடிய முல்லைக்குக் கொழுகொம்பு வைப்பது; எதையும் எதிர்பாராமல் வறியவர்க்கு ஈவது.

ஒப்புரவு கடப்பாடு, கடமை, கட்டாயம் செய்யவேண்டியது. ஈகை ஈரநெஞ்சால் விரும்பிக் கொடுப்பது.

**கைம்மாறு வேண்டா கடப்பாடு, மாரிமாட்டு**
**என்ஆற்றும் கொல்லோ உலகு (211)**

ஒப்புரவு ஒருவனது கடப்பாடு. அவன் உலகிற் பிறந்தான்; இந்த உலகே அவனை வளர்த்தது; இந்த மக்களிடமே அவன் சம்பாரித்தான் - செல்வம் சேர்த்தான். இவன் ஆகாயத்திலிருந்து குதிக்கவில்லை; இவனது செல்வம் மேலுலகிலிருந்து கொட்டிய பொன்மழை அன்று. இவன் இந்த உலகிற் சேர்த்தது. இவனது திறமையால், முயற்சியால், உழைப்பால் சேர்த்தவை என்பன உண்மையே. ஆயின் அவை அனைத்திற்கும் களம் இவ்வுலகம்; மக்கள் மன்பதை; சமுதாயம். எனவே இவனுக்குத் தான் பிறந்த, வாழ்கின்ற, பொருள்வளம் சேர்க்க நிலைக்களமாகின்ற இவ்வுலகுக்குச் செய்யவேண்டிய கடப்பாடுதான் ‘பொதுநல அறம்'. அது கடமை - கடப்பாடு. தந்தை மகனுக்கும் மகன் தந்தைக்கும் செய்யவேண்டியது போன்ற கடமை அது. அதற்குக் கைம்மாறு எதிர்பார்த்தல் கூடாது. தாய்க்குக் கடமை ஆற்றுபவன், அவளிடமிருந்து கைம்மாறு எதையும் எதிர்பார்ப்பானா?

மழை அனைவர்க்கும் பயன்படுமாறு, ஓரிடத்தில் பெய்யும். அதற்கு யாரும் கைம்மாறு செய்வதில்லை. அதுபோலக் கடமையாற்று; பயனை எதிர்பார்த்துச் செய்வதன்று அது என்பது மிகப் பொருத்தமான **‘சமதருமக்'** கோட்பாடு அல்லவா?

ஈகைக்கு இலக்கணம் சொல்லும்போதும், திரும்பிவரும் உதவியை எதிர்பார்த்துச் செய்தல் கூடாது. ஆனால் வறியவர் எனப் ‘பாத்திரம் அறிந்து பிச்சை இடுவது'

அது. இரப்பவர் பார்த்து ஈவது. பொதுநல அறமென்பதைவிடத் தனிநல அறமெனல் தகும்.

**வறியார்க்கு ஒன்று ஈவதேஈகைமற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து (221)**

குறியெதிர்ப்பு உலகவழக்குச் சொல். அரிசி, சர்க்கரை போன்றவற்றை அளவு குறித்துக் கொடுத்து, அதே அளவு திரும்ப வாங்கிக் கொள்ளும் உலக வழக்காறு. அது ஈகை ஆகாது. பண்டமாற்றுப்போலக் கைமாற்று அது. உலகில் கைமாற்றாகப் பணம் வாங்கித் திருப்பிக் கொடுக்கிறோமல்லவா?

**<u>வாய்மை</u>**

அதிகார முதற்குறள்கள் பல இவ்வாறு, அவ்வவ் அதிகாரத் தலைப்புக்குப் புதிய விளக்கமாக, இலக்கணமாக அமைந்து கிடப்பதை 'வாய்மை' என்ற அதிகாரத்தாலும் அறியலாம்.

**வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல் (291)**

**பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின் (292)**

வாய்மைக்குப் புதிய இலக்கணம் வகுக்கின்றது வள்ளுவம். **'தன் நெஞ்சுஅறிவது பொய்யற்க'** என்றும் **'உள்ளத்தால் பொய்யாது ஒழுகுக'** என்றும் தொடர்ந்துவரும் இவ்வதிகாரக் குறள்கள், மிக வற்புறுத்திப் பொய்யாமையே அறமெனக் கூறுகின்றன.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று (297)**

என்றும் கூறுகிற வள்ளுவப் பெருமான், 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' எனக் கூறுவதை ஒப்பு நோக்க வேண்டும். **'மனத்தொடு வாய்மை மொழிதல்'** (295) பற்றிப் பேசும்போது, உள்ளத்தொடு பொருந்த வாய்மை பேசவேண்டும் என்று கூறுகிறாரே? உள்ளம் அறிய, மனச்சான்றுப்படி உண்மை பேசு என்பதன்றோ, அதன் கருத்து?

'புரை தீர்ந்த (குற்றம் சிறிதுமற்ற) நன்மை' பயத்தலும் 'யாருக்கும் எதற்கும் சிறிதும் தீமை இல்லாதவை' ஆதலும் வாய்மை என்றதில் புதுமையும் உளது; புரட்சி மனப்பாங்கும் உளது.

வாய்மை - வாயால் பேசப்படும் உண்மை. உண்மை (உள்ளம்), மெய்ம்மை (உடல்) வாய்மை (வாய்மொழி) மூன்றும், 'சத்தியம்' பற்றிய, தமிழ்ச் சொற்கள். இதில் வாய்மை என்று உண்மை பேசுவதாகச் சொல்லி, உலகிற்குத் தீங்கு விளையச் செய்துவிடுதல் கூடாது. மனம் மொழி மெய் (செயல்)களால் ஒருவன் சத்தியமாக நடக்க வேண்டும். இது வள்ளுவருக்குக் கருத்து வேறுபாடில்லை. வாய்மொழி - வாய்ப்பேச்சு. இது உலகியல் நோக்கிய வள்ளுவம். 'புரை தீர்ந்த ஒன்று' தன்னலம் கருதியதாக இருத்தல் இயலாது. சாகப்போவது உறுதி என்று தெரிந்தாலும், நோயாளியின் தாயிடம் 'எப்படியும் பிழைக்க வைக்கப் பார்ப்போம்' என்று தைரியம் சொல்வது தவறாகாது.

இவ்வாறு குற்றமற்ற நன்மை பயக்குமாறு பேசப்படுவன, தீமை சிறிதுமற்றனவுமாயின், அவை 'வாய்மை'யின் இடத்தில் வைத்து ஏற்கப்படும் என்பதே கருத்து. 'வாய்மையே' என்பதற்கும், 'வாய்மை இடத்த' என்பதற்கும் வேறுபாடு உண்டு. மிகச் சிறந்த தலைவரை இழந்த நிலையில் 'இனி அவரது இடத்தை நிரப்புவது அரிது' என்பர். 'தலைவர் வந்திலராயினும், அவ் இடத்தை ஓரளவு நிரப்புவதற்குத் துணைத் தலைவர் வந்துளார்' என்பர். இதே மொழிநடையில்தான், 'வாய்மை அன்றெனினும், வாய்மையின் இடத்தில் வைத்துப் போற்றுதற்குரியது' என்று கூறப்பட்டுள்ளது.

அக்காலத்தில் தோழி தலைவனிடமும் தாயிடமும் 'இல்லாததும் பொல்லாததுமாகிய' பொய்களையும் சொல்லி, **தலைவியின் திருமணத்தை விரைவுபடுத்துவாள்.** தலைவனிடம் 'பொய்தலைப் பெய்தல்' என்று தலைவிக்கு மிகவும் ஆபத்து என்று 'படைத்து மொழி கிளவியால்' (பேச்சால்) திருமணத்திற்குத் தூண்டுவாள் (தொல். 1183) அதைத் தொல்காப்பியர் 'புரை தீர் கிளவி' (1060) என்பார். பொய்யாயினும் புரை - குற்றம் தீர்ந்த கூற்று என்பது கருத்து. களவொழுக்கத்தில் பொய்சொல்லியேனும் திருமணத்தை முடிக்கவேண்டிய சூழல் ஏற்படும். அதுவே குற்றமற்ற நன்மை. 'மெய்யினும் பொய்யினும்' 'பொய்யென மாற்றிமெய் வழிக்கொடுப்பினும்' (1060) என்று வருவன பலவுள.

வடநூல்களும் பிற நூல்களும் 'சத்தியத்தைப்' போற்றிய அளவு, 'கொல்லாமையைப் போற்றாத காலம் அது. வேள்வியில் கொலை ஏற்கப்பட்ட பின்புலம்

வள்ளுவர் காலம். சமணமும் புத்தமும் இவ் வைதிக வேள்வியை மறுத்தன. திருவள்ளுவரும் மறுத்தார். அதனால் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலை' அவர் எதிர்த்தார். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடிய பாலைக் கௌதமனார்க்காகப் பத்துப் பெருவேள்விகள் செய்த பல்யானைச் செல்கெழு குட்டுவனும் என இவ்வாறு தமிழக வேந்தர்கள் எல்லாம் 'வேள்வி' ஆசையில் மூழ்கியிருந்த காலம் அது. 'அந்தி அந்தணர் இறுக்கும் முத்தீ விளக்கில் துஞ்சும்' (புறம்.2) இமயமலைச் சாரலிலிருந்து, இவ் வேள்விகளை இயற்றவே ஆரிய அந்தணர்களைத் தமிழ் மன்னர்கள் அழைத்துவந்த காலம் அது. தமிழ் மூதறிஞர் **கா. அப்பாத்துரையாரின் 'தென்னாட்டுப் போர்க்களங்கள்'** நூலில், இவற்றைப் படித்து அறியலாம். அன்று முதல் இன்று வரை இவ் வேள்வி, ஹோமம் இவற்றில் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால் பாவம் தீரும்; புண்ணியம் உண்டாகும்; எண்ணியது நடக்கும் என்ற மனப்பான்மை தடித்துப் போனது. இதனால் 'பக்தி' என்பது பொதுநலத்தை அழித்துத் தன்னலத்தை வளர்ப்பதாகித் தொலைந்தது.

இப் பின்னணியில், திருவள்ளுவர் சத்தியத்தின் அளவும் அதற்கு மேலாகவும் கொல்லாமையை வற்புறுத்த எண்ணினார். அதனால்தான், **'ஒன்றாக நல்லது கொல்லாமை, மற்று அதன் பின்சாரப் பொய்யாமை நன்று'** (323) என்று கூற நேரிட்டது. **'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று'** (297) எனவும் வலியுறுத்தியுள்ளார். 'வேள்விக்கண் கொலை கொலையன்மை அறிக' என்பார் பரிமேலழகர் (329).

இவ்வாறு வேள்வி கருதிக் கொல்லாமையை அத்துணை வலியுறுத்தாத சூழலில், இரண்டையும் வற்புறுத்திய விதம் இது. திருவள்ளுவர், தாம் கூறவரும் ஒவ்வோர் அறத்தையும் அந்தஅந்த இடத்தில் வற்புறுத்த, இவ்வாறு கூறுவார் என்பது உண்மையே. ஆயினும் அவற்றிடையே நுட்ப வேறுபாடு இருப்பதையும் மறுப்பதற்கு இல்லை. **'மற்று அதன் பின்சாரப் பொய்யாமை நன்று'** என, இரண்டாம் இடம் தருவதில், ஒரு நுண்கருத்து உட்பொதிந்து உளதன்றோ?

**அமிழ்தம்**

அமிழ்தமே பேச்சில் அமிர்தம், அமுதம் என ஆனது. இதனைத் **'தேவாமிர்தம்'**, தேவ உலகில் கிடைப்பது எனப் புராணக் கதை எழுதினர். பாற்கடல் கடைந்தபோது, இத் தேவ அமிழ்தம் வெளிப்பட்டு, அதனை உண்டதால் தேவர்கள் சாகாத வரம் பெற்றனராம். அதனால் அமிழ்தத்திற்குச் **'சாவா மருந்து'** எனவும் பெயரிட்டனர். மக்களிடையே நிலவிய இந் நம்பிக்கையை அறிந்தவராதலின், அவர் கண்காணாத அத் தேவாமிர்தம் போலவே, கண்கண்ட 'வான் அமிழ்தம்' ஒன்று இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று** (11)

மழை பற்றி, **'வான்சிறப்பு'** அதிகாரத்தில் வரும் முதற்குறள் இது. இதன் பொருள் : 'வான் நின்று' - வான் - மழை. நின்று - நிலையாக இடையறாது பெய்தலால். மழையாலேதான் உலகம் தழைத்து நடைபெற்று வருகிறது (வழங்கி வருகிறது). மழை இன்றேல் பயிரில்லை;

பயிரின்றேல் உணவில்லை. உணவு இன்றேல் உலகம் பஞ்சத்தில் வாடி மடிய நேரும். எனவே உண்மையான 'சாவா மருந்து' - 'அமிழ்தம்' என்பது இதுதான்! 'தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று! இதுதான் அமிழ்தமென உணர்ந்துகொள்ளத் தக்கது. 'கண் கண்ட அமிழ்தமடா இது' என்று, கண் காணாத அமிழ்தம் பற்றிக் கற்பனை செய்து, கனவு காணும் மக்களுக்கு அடித்துச் சொல்லும் நயம் காண்க!

'வான் நின்று வழங்கி வருதல்' என்பதிலும் ஒரு நயம் உட்பொதிந்துளது. இந்த அமிழ்தமும் வானத்திலிருந்துதான், நமக்கு வழங்கப்படுகிறது. வான் நின்று - வானத்திலிருந்து. வழங்கிவருதலால் - நமக்கு வழங்கப்படுதலால். தான் அமிழ்தம் என்று - இதுவும் 'அமிழ்தம்' என்றே உணரத்தக்கது. 'உலகோர் நம்பும் அமிழ்தத்தை நினைப்பூட்டி, 'இதோ பார்! கண்கண்ட அமிழ்தம்' என்பது ஒரு **மடைமாற்று** உளவியலுமாகும்.

தேவ அமிர்தம் - உலகினர் நம்பிக்கை; பிறர் கருத்து. அதை ஏற்றுத் திருவள்ளுவர் தமது கருத்தாகிய **'மழையே அமிழ்தம்'** எனப் புதுவிளக்கம் தரும் இடம் இது. வானமிழ்தம் - இதுவும் தேவாமிர்தமல்லவா என்ற நகைச்சுவைத் தொனி, இதில் இல்லையா?

'அமிழ்தம்' என்பது, அமிழ்வது; மழைத்துளி மண்தரையில் விழுந்து அமிழ்வதால் அமிழ்தமாயிற்று என்பார் பாவேந்தர் பாரதிதாசன்.

பொதுவாக உணவு மிக இனிதாக இருந்தாலும், சுவை மிகுதியான அதுபோன்ற எதனையும் 'அமிழ்தம்' என்பது

உலகவழக்கு. 'தம் மக்களின் சிறு கை அளாவிய கூழை, அமிழ்தினும் ஆற்ற (மிகவும்) இனிது' என்பார் திருவள்ளுவர் (64). 'அமிழ்தத்தை யாரேனும் தூய்மையில்லாத சாய்க்கடையில் கொட்டுவார்களா' எனக் கேட்குமிடமும் ஒன்றுண்டு (720).

மழை பெய்தால் பயிர்கள் தழைக்கின்றன. நீர்த்துளி பட்டதும் பசும்புல் தலைநீட்டி எழுகிறது. இதிலிருந்தே அமிழ்து பற்றிய சாவா மருந்து என்ற கற்பனையும் உருவாகியுளது. மழை இல்லையென்றால் உயிரும், பயிரும் அழியும்தானே?

காதலியைத் தொடுந்தோறும் காதலனின் உயிர்தளிர்க்கிறதாம். இதனால் அத்தலைவன், 'இந்த இளம் பெண்ணின் தோள்கள் அமிழ்தினால் ஆனவை' எனப் புகழ்கின்றான்.

**உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலான், பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள் (1106)**

உறுதோறு - தழுவுந்தோறும். பேதை - இளமை பொருந்திய தலைவி. பசி போலக் காம இன்பமும் ஒரு பசி. பசி தீர்த்து உணவுண்பதால் உடல் நலமுற்று, உயிர் தழைக்கிறது. காமப் பசியும் தீர்தலால் உடல் நலமுற்று உயிர்தளிர்க்கும் என்ற கருத்து மிக நுட்பமானது. காமம் - உடலின்பம். அது இழிவானதன்று. உண்மையான, அளவான காதல் வாழ்வால் உயிர்தளிர்க்கும் என்ற கருத்து, அன்றைய புத்த, சமண, வைதிக சமயக் கருத்துக்களின் வேறுபட்டது. எக்காலத்திற்கும் பொருந்தும் சிறந்த கருத்து.

இவ் அமிழ்தத்தைச் 'சாவா மருந்து' (82) என்றே கூறுமிடமும் ஒன்றுண்டு அல்லவா?.

இவ்வாறு உலகினர் கருத்தையும் ஏற்றுக்கொண்டு, திருவள்ளுவர் தமது கருத்தை நிலைபெறச் செய்து விளக்கும் இடங்களே அவர்தம் புதுமைச் சிந்தனையையும் புரட்சி மனப்போக்கையும் புலப்படுத்துகின்றன.

<u>அந்தணர்</u>

அந்தணர் என்பது நல்ல தமிழ்ச் சொல். தண்ணளி (கருணை) மிக்க அருளாளர்களிடம் ஒரு பொலிவு காணப்படும். அது பிறரை வணங்க வைக்கும் ஈர்ப்புமிக்க அழகு. வள்ளுவர் காலத்தில் பிறப்பினால் 'அந்தணர்' எனப்பட்டோர், வருணாசிரம வழியில் வாழ்ந்தனர். பிறப்பினாலேயே தாம் உயர்குலத்தவர் எனக் கூறிக்கொண்டனர். இதனைப் பார்த்துத் தமிழர்களும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என ஒரு பிரிவினை பேசிக்கொண்டனர் எனத் தெரிகிறது.

எங்ஙனமாயினும் 'வருணாசிரம தருமத்தை' அடியொண்ட மறுப்பவராகிய திருவள்ளுவர், தமிழர்களைப் பார்த்து, 'ஒருவனது உயர்குலம் - குடிப்பிறப்பு என்பது அவனது ஒழுக்கத்தினால் மட்டுமே அமையும். ஒழுக்கம் தவறினால் அது இழிந்த பிறப்பு ஆகிவிடும்', என்று அடித்துச் சொல்கிறார்.

இன்று எல்லோரும் ஒப்பக் கூடிய - ஒப்ப வேண்டிய உண்மை இது. சாதாரண வாழ்க்கையில் இது இன்று இல்லை. ஆயினும் மடங்களும் பல அரசியல்

இயக்கங்களும் காலம் பார்த்து, இவற்றை மீண்டும் நிலைநாட்டக் காத்திருக்கின்றன.

அறநெறிப்படி வாழ்வோரே அந்தணர் ஆவர்; ஏனெனில் அவர்கள் எல்லா உயிர்களிடத்திலும் செவ்விய கருணையை மேற்கொண்டு ஒழுகுவார்கள்!

**அந்தணர் என்போர் அறவோர்; மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டுஒழுக லான் (30)**

**"அந்தணர் என்பது குலப் பெயராகவும் ஆளப்படும். திருவள்ளுவர் அச்சொல்லுக்குப் புது விளக்கம் தருவதிலிருந்து, அவருக்குப் பிறப்பால் வரும் குலத்தில் நம்பிக்கையின்மை வெளிப்படுகிறது. இதுபோல் சொற்பொருள் விளக்கமாக, இலக்கணமாகக் கூறுமிடங்கள் சிலவுள. அவை பழைமையை மாற்றிப் புதுப்பார்வை தருவன" (நுண்பொருளுரை).**

மேலும் அந்தணர்கள் வேள்வி, ஹோமம் என ஈடுபட்டு, அதனாலேயே மூவேந்தர்களால் தென்னாட்டிற்கு வரவழைக்கப்பட்டு, அச் சடங்குகள் பெரிதும் போற்றப்பட்டு நடைபெற்ற காலம் அது. அதனால், வேள்வி என்று உயிர்களை ஓம குண்டத்தில் போட்டுச் செய்யும் கொலையை மறுத்த புத்தர், ஆட்டுக்குட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு, வேள்வி மறுப்புச் 'சத்தியாக்கிரகம்' - அறப்போராட்டம் நடத்தியதை வரலாற்றில் படிக்கின்றோம். அவர் பிற உயிர்களிடம் அன்பு வேண்டுமெனக் கருத்துரை பரப்பினார். வேடன் புறாவை அம்பெய்து கொல்வதைத் தடுத்தவர் அவர். அவர் வரலாறு, அவரே இக்குறளின்படியான 'அந்தணர்' என உணர்த்தும்.

திருவள்ளுவரும் மேன்மை தருமென்று உயிர்க்கொலை செய்பவர் அந்தணராகார்; எவ்வுயிரிடத்தும் செந்தண்மையாம் தண்ணளி பூண்டு ஒழுகுபவரே அந்தணராவார் என எதிர் மறுத்துக் கூறும் 'தொனி'யும் இக்குறளில் உளது. அதாவது உயிர்க்கொலை புரியும் அந்தணர் வாழ்ந்த காலத்தில், உயிர்க்கொலை புரியாது, அவ்வுயிர்களுக்குச் செந்தண்மையாம் தண்ணளியை - கருணையைப் பூண்டு ஒழுகுபவரே அந்தணராவார் எனக் கூறும் நுட்பம் அறிய வேண்டிய ஒன்று.

**ஒழுக்கமே மழையைப் பெய்விக்கும்**

புத்திரன் வேண்டுமா; அதற்கு ஒரு யாகம். மழை வேண்டுமா; அதற்கு ஒரு வேள்வி. அரசன் தன் ஆட்சிச் சிறப்பையும் மேலாண்மையையும் நிறுவ ஒரு வேள்வி; வரங்கள் பெற, புதிய பல ஆயுதங்கள் பெற, வலிமை பெற, பகைவர்களைத் தோற்கடிக்க - எத்தனையோ 'யக்ஞங்கள்', 'வேள்விகள்', 'யாகங்கள்', 'ஹோமங்கள்'! இவற்றால் அக்கினிதேவன் மூலம், ஆகுதி பெய்து, 'அவிசு' எனப்படும் உணவை தேவலோகத்திற்கு அனுப்பியும் காணிக்கை செலுத்தியும் தேவர்களிடமிருந்து, அவரவர் தத்தம் நினைத்தன அனைத்தையும் பெறலாம்.

குருக்கள்மார் எனப்படும் புரோகிதர்கள் தமது வருமானம் கருதி, இப்போலிப் புனைவுகளைப் புராணங்களாக எழுதி, மக்களைத் திசை திருப்பி விட்டனர் என்பதே **வடமொழி இலக்கிய வரலாறு** கூறும் செய்தியாகும். இதை இன்றைய உயர்குலத்தாரும் படித்துப் பார்க்க வேண்டும்.

இன்றும் வடமொழியிலுள்ள நல்ல கருத்துக்கள் வெளிப்படாமல், இப்போலிப் புனைவுகளே முன்னிறுத்தப்படுவது, மிகுந்த வருத்தம் தருவதாகும்.

திருவள்ளுவர் எச்சமயமாயினும் அதிலுள்ள நல்ல கருத்துக்களையே ஏற்றுக்கொண்டார்.

வைதிக சமயம் என்பது ஒரு கலப்படத்திருவுருவம். அது வளர்த்த நம்பிக்கைகள் பல, சுயநலம் கருதி உருவாக்கப்பட்டவை. ஒருவனது பாவம் - தீயசெயலின் பயன் அவனை அடையாதவாறு, பற்பல பரிகாரங்கள், பிராயச்சித்தங்கள், கழுவாய்கள் எழுதிவைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டன. இம் மூடநம்பிக்கை இன்றைய இந்தியாவை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது. எதற்கெடுத்தாலும் பிராயச்சித்தம். தீமை செய்து தப்பித்துவிடலாம் என்ற மூடநம்பிக்கை . சோதிடம் பரிகாரத்திற்கு வழி சொல்லிச் சொல்லி, நாட்டை அழித்து ஒழித்துப் பாழ்படுத்துகிறது.

செய்த பாவத்திற்குப் 'பரிகாரமே இல்லையா?' என வினவுகிறார்கள். மாற்று என்பது செய்த குற்றத்தை நினைத்து வருந்துவது; அழுவது; திருந்துவது. மீண்டும் செய்யாதிருப்பது. நல்வினை செய்து, மாறுவது.

அதைவிடுத்துப் பணம் செலவழித்து, சில சடங்குகளால் பரிகாரம் தேடிவிடலாம் என வளர்க்கப்படும் மூடத்தனத்தைத்தான் வன்மையாக எதிர்க்க வேண்டும். அதைத் தொலைக்காவிட்டால் நாடு தொலைந்துவிடும்.

மக்களின் பக்தியுணர்வு இவ்வாறு பாழடிக்கப்பட்டுவிட்டது. பக்தி செலுத்துவதே 'பாவ

விமோசனத்திற்கு' என்பது தவறு. பக்தி என்ற நம்பிக்கை நல்வாழ்வைத் தரும்; செல்வம் தரும்; கல்வி தரும் என்பது வேறு. ஆயிரங்கோடி கொள்ளையடித்தவன், அரைக்கோடியில் குடமுழுக்குச் செய்தால், கோயில் உண்டியலில் போட்டால் பாவம் தீரும் என்பது வேறு. கள்ளச் சாராயத்தில் கொள்ளையடித்தவன், ஆண்டவனுக்குத் தங்கக் கூரை அமைக்கலாமா? அமைத்தால் பாவம் தீர்ந்து விடுமா? ஆன்மிகம் இதை ஆதரிக்கலாமா?

திருவள்ளுவர் ஒழுக்கத்தையும் அறத்தையுமே வலியுறுத்தினார். அவையே செல்வம் தரும்; சிறப்பும் தரும் என்பது அவர் கருத்து. அதுவே வாழ்வு தரும்; குழந்தை தரும்; இன்பமெல்லாம் தரும் என்பார் அவர்.

**நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு (20)**

உலகம் நீரின்றேல் வாழஇயலாது. பிற உணவுகளைத் தருவதோடு, தானும் உணவாவது அது. அத்தகைய வான் மழை இன்றேல், மக்கள் ஒழுக்கமும் நிலைபெறாது. மழையின்றி வறுமையும் பசியும் மிகுமாயின், மக்கள் ஒழுக்கமாய்க் கட்டுப்பாட்டுடன் வாழ்தல் இயலாது.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (55)**

இக் குறளும் கற்புடைய பெண் 'பெய்' என்று கூறினால், மழையும் அவள் ஏவல்கேட்டுப் பெய்யும் என்று கூறுகிறது. இது ஒழுக்க அடிப்படையினாலான நம்பிக்கைதானே? 'தொல்லுலகில், நல்லார் ஒருவர்

உளரேல், அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை' (மூதுரை 10) என ஔவையார் கூறுவதும் இதன் தொடர்ச்சியேயாகும்.

மன்னவன் ஆட்சி, முறை மாறாத நாட்டில் மழைபெய்யும் என்பதை வள்ளுவர் ஒப்புகிறார். மழையையும் மன்னவன் ஆட்சியையும் இயைபுபடுத்துகிறார் (542, 557). நல்லற ஆட்சி நடக்கும் நாட்டிலேதான் மழையும் விளைவும் சிறக்கும் என்றும் (545) கொடுங்கோலாட்சியில் மழை பெய்யாது தவிர்க்கும் (559) என்றும் கூறுகிறார்.

வேள்வி செய்தால் மழை பெய்யும் என்ற புனை கதைகளை மறுத்து ஒழுக்கமே, கற்பே மழையையும் தரும் என நிலைநாட்டுகின்ற இது தமிழ்ப் பண்பாடு ஆகும்.

தனிமனிதன் சிறப்புறவும் நாடு தழைக்கவும் ஒழுக்கம், அறம், நேர்மை, நீதியே அடிப்படை என்ற நம்பிக்கை இந்தியப் பொதுச் சிந்தனையில் ஏற்கப்பட வேண்டிய ஒன்று. அது ஏற்கக் கூடியது; மனிதரைக் காப்பாற்றும் நல்ல நம்பிக்கை என்பதால் திருவள்ளுவர் அதனைப் பலவாறு வற்புறுத்தியுள்ளார்.

## நிலையாமை

உலகம் நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது; இளமை நிலையில்லாதது; மானுட வாழ்வும் நிலையில்லாதது. இதுவே உண்மை; மெய்ப்பொருள் உணர்வு. இதைக் கூறும் பிற நூல்கள் பல, இவற்றை வெறுக்கத் தூண்டின. உலகைவிட்டு ஓட வழிகாட்டின.

ஆனால் தமிழர் பண்பாடு இவற்றின் வேறுபட்டது. சங்க இலக்கியம் இவ்வுலகக் காதல் வாழ்வில் அழுத்தம் வைப்பது. நிலையில்லாதது உலகம்; இதை உணர்ந்து நீ நிலைத்த பணி செய்து வாழவேண்டும். இவ்வாறு அறிவுறுத்துவனவே சிறந்த வழிகாட்டி நூல்களாக முடியும்.

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல் (333)**

செல்வம் 'அற்கா இயல்பிற்று' - நிலைநில்லாத இயல்பினை உடையது. அது பெற்றால் 'அற்குப ஆங்கே செயல்' - அச் செல்வத்தைப் பெற்றால், நிலைபேறுடைய நற்செயல்களை அச்செல்வத்தைப் பெற்ற அப்பொழுதே செய்க!

வாழ்க்கையை வெறுப்பதாக்காமல், விருப்புடையதாக ஆக்கும் மனப்போக்கு திருக்குறளில் இழையோடும் அடிக்கருத்தாகும். நிலையாமை அதிகாரக் குறளாகிய இது, நிலைத்த பணி செய்யவல்லவா வழி சொல்கிறது?

**தலைமையானது**
**இறையாண்மையே**

பாண்டவர் கவுரவர் போரில் பெருஞ்சோறு வழங்கிய சேரன் 'பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்' ஆவான். அவனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது புறநானூற்றில் இரண்டாம் பாட்டு. புலவர் அம் மன்னனை, **'நாஅல் வேத நெறி திரியினும், திரியாச் சுற்றமொடு'** வாழ வாழ்த்துகிறார்.

நான்கு வேதங்களும் என்றும் மாறாதவை; நிலை பேறானவை எனப் போற்றியுரைக்கப் படுகிறது. மேலும்

அந்தணர்கள் இமய மலைச்சாரலில் முத்தீ வளர்த்து, அந்திப்போதில் ஆவுதி பெய்து, தேவர்கட்குத் தம் கடமையை நிறைவேற்றும் குறிப்பும் வருகிறது. வடக்கே இமய மலையையும் தெற்கே பொதிகை மலையையும் போல வாழ்க என வாழ்த்த வந்தவர், இமய மலைச் சாரலை இங்ஙனம் குறிப்பிடுகிறார்.

**அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்**
**முத்தீ விளக்கில் துஞ்சும்**
**பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே**
**(புறம் 2)**

முத்தீ என்பன ஆகவனீயம், காருக பத்தியம், தென்திசையங்கி. குளிர்மிகுந்த நாட்டினராதலின், வடவர் இவ்வாறு எரி ஓம்பினர் - நெருப்பை வழிபட்டனர்.

திருவள்ளுவர் தென்னாட்டினராதலின், மக்களின் வாழ்வு மரபுக்கு ஏற்ப மழையைத் தெய்வத்திற்கு இணையாகவைத்து 'வான்சிறப்புப்' பாடினார். திருக்குறளைத் தமிழ்ப் பண்பாட்டின் பிழிவு, தமிழரின் அடையாளம் - முகவரி என்பன யாவும் இதனாலேதான்.

இமயமும் பொதியமும் என இப்பாடலில் வருவது போல, இந்தியாவை ஒரே நாடாகப் பார்க்கும் பார்வை, சங்கப் பாடல்களில் காணப்படுகிறது.

**'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொருதொடுகடற் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்**
**(புறம் 6)**

இவ்வாறு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் ஆட்சிப் பரப்பும் புகழும் பேசப்படுகிறது. அந்தணர்கள் வேதம் ஓதினர்; மிகவுயர்வாக மதிக்கப் பெற்றனர். தென்னாட்டில் குடியேற்றப்பட்டனர். இங்கு வந்தபின் தமிழரோடு தமிழராகவே வாழ்ந்தனர். எனினும் அவர்கள் தமிழக மன்னர்கள் வேள்விக்காக அழைத்து வரப் புதியவராய்ப் புகுந்தமையின் தங்கள்குல மேன்மையைப் பலவாறு நிலைநாட்டினர். மன்னர்களை விடவும் அந்தணரே பிறப்பால் பெரியர் என்ற கருத்தும், மன்னர்கள் அந்தணரை வழிபட்டு வாழவேண்டுமென்ற கருத்தும் இங்கு உருவானது. அதனால்தான் காரிகிழார், முதுகுடுமிப் பெருவழுதியிடம்,

**இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த**
**நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே** (புறம். 6)

என்று கூறினார். ''நினதுமுடி, சிறந்த நான்கு வேதத்தினையுடைய அந்தணர் நின்னை நீடுவாழ்க என்று எடுத்தகையின் முன்னே வணங்குக!'' என்றார் அவர்.

இத்தகைய அந்தணர்கள், பார்ப்பனர் என்ற பெயருடன் இங்குக் குடியேறித் தமிழ்ப் பெண்களை மணந்தும் தமிழரோடு தமிழராய்க் கலந்தும் வாழ்ந்தனர். பாணர், பொருநர், கணியர், ஆசான்மாரொடு கலந்து தமிழராயினர். எனினும் இவர்களது முன்னைய மரபுப்படி, அந்தணர் உயர்பிறப்பினர் என்ற கருத்தை விடாதவரும் வாழ்ந்துள்ளனர். இராமனுக்கு முடிசூடுவதாக அறிவித்ததும், வசிட்டர் கூறிய 'உறுதிப் பொருள்கள்' எனப்படும் அரசியல் அறிவுரையில் அந்தணரின் உயர்வு பேசப்படுகிறது.

**கரிய மாலினும் கண்ணுத லானினும்**
**உரிய தாமரைமேல் உறைவானினும்**
**விரியும் பூதம்ஓர் ஐந்தினும் மெய்யினும்**
**பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்** (2-100)

திருமால், சிவன், பிரமன், ஐம்பூதங்கள், சத்தியம் - இவை அத்தனையையும் விட அந்தணர் பெரியர் என்று கம்பர் பாடுகிறார். அந்தணர்கள் கோபித்ததால் அழிந்தவர்களையும் அருளால் இன்புற்றவர்களையும் 'எண்ணி முடியாது' என அவர் மேலும் கூறுகிறார். அவர்களது தாளிணைகளைத் தலையில் தாங்கி, இனியவற்றைக் கூறிப் பணிந்து, அவர்கள் ஏவியனவற்றைச் செய்து வாழ்க எனவும் விதியும் கூட அவர்களின் ஏவலின்படிதான் நடக்கும் என்றும் எனவே பூதேவராகிய அந்தணர்களைப் போற்றிப் புகழ்ந்து வாழ்தலே மன்னர்களுக்கும் கதி என்றும் வசிட்டர் கூறியதாகக் கம்பர் பாடுவன கருதற்பாலன. இவை வடமொழியிற் கூறப்பட்டவற்றின் சாரமே எனில் மிகையன்று. வடமொழி வழிப்பட்ட கம்பன் பாட்டு இது.

**'ஆவதற்கும் அழிவதற்கும் அவர் ஏவ நிற்கும் விதியும் என்றால் இனி ஆவது எப்பொருள்?'** எனக் கேட்டு, மன்னர்களையும் அந்தணர்கள் முன் மண்டியிட வைக்கும், ஒரு கருத்துருவாக்கம், வடமொழிப் புரோகிதர்களாம் குருமார்களால், தம் சுயநலம் கருதி வகுக்கப்பட்டது. இதுவே 'சாணக்கிய உபதேசம்'. மன்னர்களைத் தம் கைவசம் வைத்துக்கொண்டு, நாட்டையே தமக்குக் கீழ்ப்படியவைத்த தந்திரக்கலை இது. இன்றும் ஜகத்குரு, லோகுரு என்றெல்லாம் சொல்லி, ஒழுக்கத்தில் தவறினும்

அவர்களே மேம்பட்டவர் எனக் கூறப்படும் ஒரு மனப்பான்மை, பெரும்பெரும் செல்வர்களிடையேயும் தொழிலதிபர்களிடையேயும் பரப்பப்பட்டுள்ளது. ஜகத்குரு, சாதிபார்க்கும் குரு ஆகலாமா? அல்லது சாதிபார்க்கும் குரு ஜகத்குரு ஆகமுடியுமா?

இவை புரோகிதத் தொழில் கருதி, வருமானம் தேட எழுதிவைக்கப்பட்டவை. வடமொழியில் வேறுபல நற்செய்திகள் இருப்பினும், அவை யாவும் மறக்கடிக்கப்பட்டு விட்டன. காரணம் வடமொழியையே இறைமொழி - தேவபாடை என்று கூறி தமது சுயநலத்திற்குப் பயன்படுத்தியதால் இவ் வேற்றுமை வித்தே வெளிப்படுத்தப்பட்டு, அவையே மேலோங்கிவிட்டன. இன்றைய பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை இவை. எனவே வடமொழி மீது பழியையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் இத்தீய கருத்துருவாக்கங்களை அறவே விடுத்து, வெளிவருதலே இன்றைய அந்தணர்களுக்கும் உகந்ததாகும்! வடமொழியிலுள்ளனவும் மிக உன்னதமானவையும் மானுட நேயமிக்கவையும் சாதி கடந்தனவுமான சிறந்த வாழ்வியல் கருத்துக்களையுமே இனி எடுத்து மொழிய வேண்டும். வழிபாட்டு மொழி, சடங்குமொழியாகத் தாய்த்தமிழுக்கு இடம்கொடுத்தால் மட்டுமே, இனி இங்கு வடமொழி வெறுப்பு நீங்கும்.

திருவள்ளுவர் இவற்றுக்கான நல்வழியை, அன்றே காட்டிச் சென்றுள்ளார்.

**அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்** (543)

அந்தணர்தம் வேதங்களுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய், அவற்றையும் காப்பது அரசனது செங்கோலாட்சியே என்பது இதன் கருத்து. முற்கூறிய கம்பராமாயணக் கருத்துக்களுடன் ஒப்பிட்டால், வள்ளுவர் உள்ளம் தெள்ளிதிற் புலனாகும். இங்கு மன்னவன் கோல் என்பது, 'ஒரு நாட்டின் இறையாண்மை' (Sovereign Power) ஆகும். அதற்கு மிஞ்சியது பிறிதில்லை என்ற வள்ளுவர் கருத்தே, என்றும் எல்லோர்க்கும் ஏற்புடையது ஆகும்.

**ஆபயன் குன்றும், அறுதொழிலோர் நூல் மறப்பர்**
**காவலன் காவான் எனின் (560)**

பசுக்கள் பால்தராது; ஆறுதொழில்களைச் செய்து வாழ்பவர் (ஓதல் ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல், ஈதல் ஏற்றல்) எனப்பட்ட பார்ப்பனர் தமது வேதம் ஓதுதலை மறப்பர். எப்போது? காவலனாம் அரசன் முறைசெய்து காவான் எனின். 'நூல் மறப்பர்' என்பதை 'மறப்பினும் ஓத்துக் கொளலாகும்' (வேதத்தை ஓதுவதால் 'ஓத்து' என்பர். அதனை மறந்தாலும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்) எனும் குறட்பாவுடன் (134) இயைபுபடுத்திப் படித்தால் மேலும் தெளிவு கிடைக்கும்.

அந்தணர் ஆவைத்தனித்துப் போற்றியது, அதுதரும் நெய், வேள்விக்குத் தேவைப்பட்டதாலேயாம். ஆவின் பயன் நெய். திருவள்ளுவர் நேரடியாகவே இங்கு ஆட்சி எனும் இறையாண்மையின்றேல் இச்சடங்குகளும் என்னாகும் என வினவுகின்றார்.

அந்தணர்களே 'விதிக்கும் விதியாவர்' என்று கூறி, அவர்களிடம் அடிபணிய வைக்கும் சாணக்கியப் புரோகிதத்

தவற்றை, வள்ளுவம் அறவே களைந்து, புதுமையைப் புகுத்தித் தமிழரைச் சீர் செய்ய முயன்றும், தமிழர்கள் இவற்றை உணராது இருப்பது உலக முட்டாள்தனங்களில் முதன்மை வாய்ந்த முட்டாள் தனமாகும். மேலும் ஒரு நாட்டின் 'இறையாண்மையே' யாவற்றினும் உயர்ந்த முடிமணியாய் விளங்குவது என, அவர் முடியாட்சிக் காலத்திலேயே, குடியாட்சித் தத்துவத்தை விளக்கியிருக்கும் சிறப்புப் படித்து, உணர்ந்து, பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். அல்லாமல் திருக்குறள் தமிழரின் அடையாளம், பண்பாட்டுப் பிழிவு, முகவரி, அதுஇது என வெறுமனே பிதற்றித் திரிவதால் பயனில்லை. இவற்றை வெளிப்படையாக எழுதுவதால் யாரும் வருத்தப்படுவதோ பகைப்பதோ தவறு. திருக்குறள் ஒன்றே இந்தியத் தேசிய நூலாகும் தகுதியுடையது என்பதைவிட, திருக்குறளைத் தேசிய நூலாக ஏற்றால்தான் இந்தியா வாழும் என்று உறுதிபடக் கூறலாம். ஒருவேளை, காழ்ப்புணர்ச்சியால் இது மறுக்கப்பட்டால், இத்தமிழ் மறை தமிழர்தம் தேசிய நூலாகித் தமிழகத்திலும் தமிழர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நிலைபெறும் காலம் வந்தே தீரும்.

திருக்குறளைத் தவிர்த்த வருணாசிரம வழிப்பட்ட கீதை போல்வன, தேசிய நூலானால், இந்தியா சிதறுண்டு போகும். திருக்குறள் இந்தியத் தேசிய நூலாவது, அதன் பொதுமையால் ஒரே இந்தியா என்ற, தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்தும்.

## முடியாட்சியிலும் ஒரு குடியாட்சி மெய்ம்மையியல்

திருவள்ளுவர் காலத்தில் அரசன், கடவுளுக்குச் சமமாக மதிக்கப்பட்டான். அரசன் கடவுளால் பிறப்பிக்கப் பட்டவன், அவன் கட்டளையை மீறுவது கடவுளின் ஆணையை மீறுவதற்குச் சமம் எனக் கருதப்பட்டது. அவன் தீய வழியில் ஒன்றைச் செய்தானாயினும், அதை மறுப்பதோ, வெறுப்பதோ 'பாவம்' எனக் கருதப்பட்டது.

அரசனானது அவன் தலைவிதி; அவன் கீழ்ப்பட நேர்ந்தது குடிமகனின் தலையெழுத்து என்ற அளவுக்கு இது சென்றது.

இங்ஙனம் கடவுளின் அவதாரமே அரசன் என்னும் கருத்து உலகெங்கும், தொடக்க காலத்தில் இருந்ததால், மேலை நாட்டவர் இதனை 'தெய்வ அவதாரக் கொள்கை' (Divine theory) என்று விளக்குவர்.

திருவள்ளுவர் அரசியலின் முதல் அதிகாரமாம் 'இறைமாட்சி'யில், ஒன்பது குறள்களில் மன்னன், வேந்தன், அரசு, நிலனாள்பவன் என்னும் கருத்துப்படவே சொற்களை ஆள்கின்றார். ஒரே ஒரு குறளில் மட்டுமே 'இறை' என்ற சொல் இடம் பெறுகிறது.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும்** (380)

அரசன் மக்கட்கு 'இறை' (கடவுள்) என்று கருதிப் போற்றப்படுவான். எப்போது? அவன் நெறி முறைதவறாது ஆட்சிசெய்து மக்களைக் காப்பவனானால், அவ்வாறு போற்றப்படுவான். இன்றேல் 'இறை' ஆகான் என்பது

கருத்து. அதாவது அரசன் மக்கட்கு 'இறை' என்று போற்றப்படுவது, **பிறப்பினாலன்று** என்பதை இது சொல்கிறது. **'பிறப்பால் நீ 'இறைவன்' எனப் போற்றப்பட மாட்டாய்; ஆனால் முறைசெய்து காப்பாற்றினால் அவ்வாறு போற்றப்படும் தகுதியைப் பெறுவாய்!'** என்று அரசனுக்கே அறிவுறுத்தும் ஆளுமை இக்குறளில் உளது. இவ்வதிகாரத் தலைப்பும் 'இறைவனது மாட்சி' என்று அமையாது, 'இறை' (நேரிய ஆட்சிமுறைமை)யின் மாட்சி என்னுமாறுளது போற்றுதற்குரியதன்றோ?

**<u>இறை</u>**

இறை - இறையாண்மை. ஓராட்சியின் முழு ஆட்சியுரிமை. சுதந்திர ஆட்சியின் தன்மை. பிறர்க்குக் கீழ்ப்படாத தன்னாட்சியுரிமை.

**ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை (541)**

ஓர்ந்து - ஆராய்ந்து. கண்ணோடாது - வேண்டியவர், உறவினர் என்றெல்லாம் தயவு காட்டாது. இறைபுரிந்து - ஆட்சியதிகாரத்தைச் செலுத்தி. யார்மாட்டும் - எல்லோரிடத்திலும் ஒருபடித்தாக. தேர்ந்து செய்வஃதே முறை - சிந்தித்து, நீதிநூல் வல்லாருடன் ஆராய்ந்து, நன்கு தெளிந்து அதன்படி செயற்படுவதே முறைமை ஆகும்.

இக் குறளில் 'இறை புரிதல்' என்ற தொடர் புதுமையானது. நேரிய ஆட்சியை நடத்துதல் என்பது பொருள். தன்னாட்சியுடைய சுதந்திர மேலாண்மையை 'இறையாண்மை' என்கிறோமே, அதை இது குறிக்கிறது.

இதுபோலவே, 'வேந்து' என்ற சொல்லையும், முழுமையான ஆட்சியுரிமையைக் குறிக்க வழங்குமிடம் ஒன்றுண்டு.

**ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும் (899)**

உயர்ந்த கொள்கைகளையுடைய சான்றோர்கள் சீறும்படி நடந்துகொண்டால், வேந்தனும், தனது அவ்வுயர்ந்த நிலைமைகெட்டுத் தன் ஆட்சியுரிமையை இழப்பான். இக்குறளில் 'வேந்து' - ஆட்சியுரிமை என ஆண்டிருப்பது காண்க.

இறை - இறையாண்மை. வேந்து - ஆட்சியுரிமை. இவ்வாறு திருவள்ளுவர் ஒருவரே இறை, வேந்து என்பனவற்றை அரசர்களின் பெயர்களாக மட்டும் குறிக்காமல் அரசுத்தன்மையைக் குறிக்கும் தொழிற் பண்புச்சொற்களாக ஆளக் காண்கிறோம். இவை அவரது சிந்தனை ஆழம், தொலைநோக்கு, சாதிசமய நெறிசாராத உலகப் பொதுநோக்கு, என்றுமே மானுடம் பின்பற்ற வேண்டிய - பின்பற்றக் கூடிய ஒரு கோட்பாடு ஆகியவற்றை நமக்கு உணர்த்துகின்றன. திருவள்ளுவரை உலகச் சிந்தனையாளர்களின் பட்டியலில் சேர்க்கின்றன. இவற்றை நாம் முதலில் இந்தியர்கள் அனைவருக்குமாவது உணர்த்தியாக வேண்டும்.

## <u>மனத்துக்கண் மாசின்மை</u>

எல்லா அறங்களுக்கும் அடிப்படை மனத்துக்கண் மாசின்மையே என நாம் எல்லோரும் சொல்லி வருகின்றோம்.

**மனத்துக்கண் மாசுஇலனாதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற (34)**

எந்த ஒரு செயலாயினும், உள்ளத்தினுள்ளே மாசு - அழுக்கு - குற்றம் இருத்தல் கூடாது. நீ துறவியாகலாம், தவம் மேற்கொள்ளலாம், இல்லறத்தானாகலாம், பெரிய பெரிய அறச்சாலைகள் நிறுவலாம், ஊரில் தருமவான் - நடுநிலையாளர் - வழிகாட்டுபவர் - தலைவர் என்றெல்லாம் பெயரெடுக்கலாம். ஆனால் அவை அனைத்திற்கும் அடிப்படையாக மனம் நல்லதாக - தூயதாக இருக்கவேண்டும்.

பிற எல்லாம் ‘ஆகுல நீர’ - ஆரவாரத் தன்மையுடையன. பிறர் பலரும் அறிய வேண்டுமெனச் செய்வன. ஆகுலம் என்றால் துக்கம் என்றும் பொருளுண்டு. காலிங்கர் ‘ஒழிந்தன எல்லாம் துக்கத்தன்மையுடைத்து’ என்று விளக்குவார்.

எந்த அறமாயினும் - வாழ்வு நெறியாயினும் மனத்தில் மாசு இருக்குமானால் அவை அறமாகா; மாசு இன்றேல் நாம் எளியதென்றும் சிறியதென்றும் கருதுவனவும் கூடப் பேரறமாகும்.

மனத்தின்கண் தோன்றும் பொறாமையைத் திருவள்ளுவர் **‘அழுக்கு’** என்பார்.

வீட்டில் குப்பை சேர்வதுபோல், உடலில் அழுக்குப் படிவதுபோல் உள்ளத்தில் அழுக்கு ஏறுவது ஓர் இயல்பான, பிறவி நிகழ்ச்சி.

நாள்தோறும் குப்பையைக் கூட்டிப் பெருக்கி வீட்டைத் தூய்மை செய்வதுபோல், உடலைக் குளித்து நாளும் அழுக்ககற்றிச் சுத்தப்படுத்திக் கொள்வதுபோல், மனத்தில் ஏறும் அழுக்கையும் ஒவ்வொரு கணமும் அகற்றித் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனத்தைத் தூய்மைப்படுத்த என்ன செய்ய வேண்டும்? தண்ணீரால் மன அழுக்கைக் கழுவ முடியுமா? உடைகளை வெளுக்க, உடலைக் குளித்துத் தூய்மை செய்ய, வீட்டையும் மெழுகிச் சுத்தப்படுத்தத் தண்ணீரால் இயலும். சிலர் நிரம்ப நீர்குடித்தால், குடல் சுத்தப்படும்; அதனால் நோய் நீங்கும்; அதுவே ஓர் இயற்கை மருத்துவம் என்று கூறுகின்றனர்.

திருவள்ளுவர் 'மனத்துக்கண் மாசு இலனாதல்' வேண்டும் என்றவர், அவ்வாறு அகம் தூயதாதற்கு ஒரு வழிகூறுகிறார்.

**புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையால் காணப் படும் (298)**

புறவுடலும் புறத்தே உள்ளனவும் தூய்தாதற்கு நீர் பயன்படும். பண்ட பாத்திரங்கள் கூட நீரால்தானே விளக்கப்படுகின்றன. ஆனால் அகம் - மனம் தூயதாதற்கு வாய்மை முக்கியம். அஃது எப்படி வாய்மை என்று உண்மை பேசினால், மனம் தூயதாகும்? சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாய்மைப் படி வாழ்பவன் தீயவற்றை நினைக்க முடியாது? 'நீ இப்பொழுது என்ன நினைத்தாய்' என்று ஒருவர் கேட்டால், மறைக்கவும் கூடாது. தீய செயல்கள்

செய்து மறைப்பதும் எளிதன்று. ஒருவருக்குச் செய்த - செய்ய நினைக்கின்ற தீங்கை 'வாய்மை' வெளிப்படுத்திவிடும்.

வாய்மைப்படி வாழ்வது கடினம். நம்மில் தொண்ணூறு பேர் 'வாய்மைப்படி' வாழ்வதாக வெளியே சொல்லி, நடிப்பதுவே ஒரு பொய்; பெரிய பொய்.

அதாவது வாய்மையைக் கைக்கொள்கின்றவன் பிற எத் தீமைகளிலும் புக முடியாது; புக நினைத்தால் அது தடுக்கும். எனவே மன அழுக்கைக் கழுவவல்லது 'வாய்மை' தழுவிய வாழ்வே என்பது வள்ளுவர் கூறும் அருமருந்து. அகத்தைத் தூய்மைப்படுத்த வாய்மையைக் கடைப்பிடி என்பது முன்னர் 'மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறம்' என்ற கொள்கையைக் கைக்கொண்டு வாழ, இஃதொன்றே வழி என்பதாகும்.

'அவா அறுத்தல்' அதிகாரத்திலும் இதன் தொடர்ச்சி வருகிறது. ஏனெனில் மனத்தில் அழுக்கைச் சேர்க்கும் பொறாமை; வெஃகுதல் (பேராசை), களவாடுதல், கொல்லுதல், பிறன் மனை நயத்தல், புலாலுண்ணல், கூடா ஒழுக்கங்கள், குற்றங்கள் எல்லாவற்றுக்கும் ஆசை (அவா) ஒன்றே அடிப்படைக் காரணமாகும். **அந்த ஆசையை அறுத்து ஒழிப்பதே மனத்தூய்மை; அம் மனத் தூய்மை வாய்மையால் மட்டுமே வரும்.**

தூய மனம் வேண்டுமேல், ஆசை அறவே கூடாது. ஆசை அழுக்கைச் சேர்க்கும் கருவி; வாய்மை மன அழுக்கைக் கழுவும் கருவி. மன அழுக்கு நோயாளி, இந்த வாய்மைக் குளிகையை (மாத்திரை), அழுக்குப் படிய

முனையும் வேளைதோறும் சாப்பிட வேண்டும். மனஅழுக்கைக் கழுவுவதென்பது ஒரு தொடர் நிகழ்ச்சி. மனம் பொல்லாதது. அது தீமையை எளிதிற் பற்றிக் கொள்வது. அதனால்தான் 'புறந் தூய்மை நீரால் அமையும்' என்று உவமை கூறினார். தொடர்ந்து, நாள்தோறும், சில பருவங்களில் காலையும் மாலையும் குளிக்க வேண்டியுள்ளது. மனத்தையும் அது ஆசையால் தாவும்போதெல்லாம் தொடர்ந்து தடுக்க வேண்டியுள்ளது. எவ்வளவு உறுதியுடைய மனமும், தீயது ஒன்றைக் கண்டதும் பற்றிக் கொள்ளவே முனையும் - அதாவது அழுக்குப் படியும். இது உலக இயற்கை மட்டுமன்று; உளவியலுமாகும்.

இந்த 'வாய்மை' என்ற அடிப்படை அறம், 'அவா' என்ற அழுக்கைச் சேர்க்கும் ஒன்றை அறவே களையும். அதனால் மனத்துக்கண் மாசிலனாதல் கைகூடும். அந் நிலையில் செய்யும் அறங்களே, உண்மையில் அறமெனப்படும். பிற எல்லாம் அறப்போலிகள், அறம் என்ற பெயரால் நடக்கும் நாடகங்கள்!

**தூஉய்மை என்பது அவாஇன்மை; மற்றுஅது**
**வாஅய்மை வேண்ட வரும் (364)**

மனத்துக்கண் உள்ள அடிப்படை அழுக்கு - மாசு அவாவே; ஆசையே. அதை நீக்கினால் பிற குற்றங்கள் தாமே நீங்கிவிடும். அதை நீக்க 'வாய்மை' என்ற தூய நீரால், மனத்தைத் தொடர்ந்து கழுவிக்கொண்டே இருக்க வேண்டும்.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று (297)**

என்று ஏன் சொன்னார்? இதனால் பிற அறங்களைச் செய்ய வேண்டாமென்பது கருத்தன்று; பிற அறங்களெல்லாம் இதன்வழிப்படும் என்பதே கருத்து. 'மாசிலனாதல் அனைத்து அறன்' என்றது போல, இங்கும் 'பொய்யாமை ஆற்றின் பிறஅறம் செய்யவே வேண்டாம்' - அதாவது பொய்யாமையே எல்லா அறமுமாகிவிடும் என நுட்பமாகக் கூறியுள்ளார். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' (110) என்பது போன்றது இது. உய்வுண்டு என்பது கருத்தன்று. அது வள்ளுவர்க்கு உடன்பாடாயின் உய்யும் கழுவாய்களை வேறு எங்காவது கூறியிருப்பார். 'நன்றி கொன்றார்க்கு' (நன்மை செய்தவர்க்கே தீங்கு செய்தவர்க்கு) உய்வே இல்லை என்பதை வலியுறுத்த வந்த மொழிநடை இது.

தமிழர்கள் 'நீராடலில்' அதிக ஆர்வம் காட்டினர். தலைவன் காதலியிடம் அருவி நீரைக் குடித்து, 'பிரியேன்' எனச் சத்தியம் செய்ததைக் குறிஞ்சிப் பாட்டில் காணலாம் (211).

'தாய் அருகா நின்று தவத்தைந்நீராடுதல்' (91) என்று வையையாற்றில் கன்னிப் பெண்கள், தாய்மார் அருகேநிற்கத் தைத் திங்களில் 'தவம்போல' நீராடி, நல்ல கணவன்மார் வாய்க்க வேண்டினர் என்ற குறிப்பு வருகிறது. சங்க காலத்திலேயே இவ்வாறு புனித நீராடும் குறிப்புக்கள் மேலும் சிலவுள.

இன்றும் அருவியும் ஆறும் தேடிப் போய்ப் புனித நீராடும் பழக்கம் தமிழக மகளிரிடையே உளது. ஆடிப் பெருக்கில் நீராடுதல், ஐப்பசியாம் குளிர் காலத்தில், பனி புலருமுன் புனித நதிகளைத் தேடிப் போய் நீராடுதல் போலும் வழக்கங்கள் உள. தலை முழுக்கு, கடைமுழுக்கு என்றெல்லாம் நாள்குறித்து, தேடிச் சென்று குளித்து மீள்வர். ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவையும் இச் சமுதாய மரபுவழி வந்தவையே.

சிலம்பில் கண்ணகியின் தோழி தேவந்தி, 'கோவலன் பிரிந்ததற்கு முற்பிறப்பில் கணவனுக்குச் செய்ய வேண்டிய நோன்பு ஒன்று செய்யாது பிழைத்தாய்! அதனால் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் சோமகுண்டம், சூரிய குண்டம் என இரு துறைகள் உள்ளன. அவற்றில் மூழ்கி, அங்குள்ள காமவேள் கோட்டத்தைத் தொழுதால், கணவனை அடையலாம்' என்று கூறி அழைக்கக் காண்கிறோம்.

அதற்குக் கண்ணகி **'பீடுஅன்று'** - என ஒரே தொடரில் விடையிறுத்தாள். அவ்வாறு அடைவது பெருமையன்று என்பது கருத்து (கனாத்திறம் உரைத்த காதை. 54 - 64).

நான்மறையாளனாம் மாங்காட்டு மறையவன் கவுந்தியடிகளிடம் மதுரைக்கு வழி கூறிய பொழுது இடப்பக்கமாகப் போகும் வழி ஒன்றைக் குறிப்பிடுகிறான். அவ்வழியில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்ற மூன்று பொய்கைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் மூழ்கி எழுந்து சென்றால் நன்மைகள் பல விளையும் எனக் கூறுகின்றான். அதைக் கவுந்தியடிகள் மிக வன்மையாக மறுத்துவிடுகிறார். (காடுகாண் காதை)

மதுரையில் கோவலனைக் கண்ட மாடல மறையவன் குமரியம் துறையில் நீராடிப் போந்ததாகக் கூறுகிறான். (அடைக்கலக் காதை 15). மேலும் குமரித்துறையில் புனித நீராடியவன், தன் பாவம் தீர 'நல்நீர்க் கங்கை ஆடப் போந்தேன்' என்று கங்கைக் கரையில் செங்குட்டுவனைக் கண்டு, அவனிடம் தமிழ்நாடு விட்டுச் செங்குட்டுவன் சென்றபின் நடந்தன எல்லாம் கூறுகின்றான் (நீர்ப்படைக் காதை).

இவற்றால் புனித நீராடுவதென்பது, தமிழரிடம் இயற்கைமீதுள்ள ஆர்வமாகத் தோன்றி, தெய்வம்போல் கருதிச் சூளுரைக்கப் பயன்பட்டமை தெரிகிறது. அதுவே மாங்காட்டு மறையவன், மாடல மறையவன் கூற்றுக்களால் 'பாவம் கழுவப் பயன்படும்' நீராடலாக மாறுகிறது.

தைந்நீராடல் இன்று மார்கழி நீராடலாக மாறினும் நல்ல கணவன் வாய்க்கச் செய்யும் பாவை நோன்பு என்ற தமிழ்ப் பண்பாடும் தொடர்ந்து வருகிறது. இந் நம்பிக்கை யைப் பயன்படுத்திப் போலித் துறவிகளும் புரோகிதர்களு ம் 'பாவம் கழுவப் பயன்படும்' எனப் பரப்பிவிட்டனர்.

**மனத்தது மாசாக மாண்டார் நீராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)**

மாண்டார் நீராடி - மாட்சிமைப்பட்ட புனித நீராடுதல். மறைந்தொழுகுதல் - அங்ஙனம் நீராடி, நல்லவர் போல் நடித்து, உலகை ஏமாற்றி வாழ்தல். 'மனத்துக்கண் மாசு இலனாதலே' தூய்மைதரும் என்றதனோடு 'மனத்தது மாசாக நீராடிப் பயனென்ன', என்னுமிதனை ஒப்பிடுக.

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை (295)**

என்ற குறளை எண்ணிப் பாருங்கள். 'தானம் செய்வதே தருமம்', 'அதுவும் அந்தணர்களுக்கே தானம் செய்து, ஒருவன் வாழ்வில் உய்தி பெறவேண்டும்', 'அந்தணர்கள் தானம் வாங்குவது அவர்தம் உயர்பிறப்பினால் பெற்ற பேறு; அதை வழங்கி வாழ்வதே மானுடர் அனைவர்க்கும் கடமையாகும்' என்றிவ்வாறுதான் மனு தரும சாத்திரம், அர்த்த சாத்திரம் எல்லாம் பகர்கின்றன.

எல்லோர்க்கும் செய்யும் ஒப்புரவு வேறு; வறியவர்க்கே ஈயும் ஈதல் வேறு; உயர் குலத்தவர்க்குத் தரும் தானம் வேறு. திருவள்ளுவர் ஒப்புரவு, ஈகை அதிகாரங்களில் 'தானம்' என்ற சொல்லைப் பயன்படுத்தவே இல்லை. இவை மூன்றும் வேறுபட்டவை என்பதே அவர் கருத்து. குறள் முழுவதும் 'இயைபு' படுத்திக் கற்பார் இதை உணர்வர். அவ்வாறே 'தவம்' செய்தலையும் வைதிகம், சமணம், புத்தம் மூன்றும் மிகமிகப் போற்றிய காலம் அது. திருவள்ளுவர் தவத்தை மடைமாற்றி, இல்லறத் தவத்தைச் சொல்வது அவரது சொந்தக் கருத்தாகும். இங்குப் பிறர்கூறும் துறவறத் தவத்தையும் தானத்தையும் குறிப்பிட்டு, அவை நல்லனவாகலாம்; ஆனால் அவற்றைவிட மனமறிய உண்மை பேசும் வாய்மை இருக்கிறதே - அதாவது உண்மையும் வாய்மையுமாகிய இவை இரண்டுமே தலையாய அறங்கள் என நுட்பமாக உணர்த்துகிறார். **'தானம் தவமிரண்டும் தங்கா, வியனுலகம் வானம் வழங்காதெனின்'** (19) என்னுமிடத்தில்கூட, பிறர் கூறும் அவற்றைச் சொல்லி, ஒழுக்கத்தையும் உயிரையும்

காப்பாற்றும் மழையின்றேல், அவை பயன்படா என எடுத்துரைக்கின்றார்.

## சிறப்பும் செல்வமும் தரும் திருவள்ளுவம்

சமற்கிருத இலக்கியம் பூமியைப் போல் மிகப் பரந்தது. நல்லன என்று தேடினால் நல்லனவெல்லாம் காணலாம்; இன்றைய சமுதாயத்திற்கு ஒவ்வாதன, தீயன என்று தேடினால் அதற்கும் அளவென்பதே இல்லை.

சமற்கிருத இலக்கியத்தையே உலகம் அறிந்துளது. இந்தியப் பண்பாடென்பது சமற்கிருத இலக்கியம் என்பதே என்று உலகெலாம் பரவியுளது.

வெளிநாட்டவர் எளிதில் வந்து கண்டு திரும்பிய இடம் கங்கைச் சமவெளியே. இதனால் வேதம், உபநிடதம், பகவத் கீதை, மனுதர்மம், அர்த்தசாத்திரம் இவற்றுடன் இராமாயண பாரதமே இந்தியக் கலாச்சாரம் - இந்தியப் பண்பாடு - இந்தியன் என்ற அடையாளம், முகவரி என உலகம் அறிந்துளது.

இன்று அரசியலில் தலைமை பெற்றுள்ளார் பேசும் ‘இந்துத்துவா’ - இதுவே ஆகும்.

வேத இலக்கியம் முழுவதும் சமயம் சார்ந்தது. அவற்றில் உள்ளவை கடவுளர்களிடம் வேண்டுகோள் விடுப்பவை; வேள்விகளில் கடவுளர்களை அழைத்து நினைத்ததை அடைய விண்ணப்பிப்பவை; மற்றும் ‘தத்துவ விசாரணைகள்’. அவை இவ்வுலகிலும் மறுமையிலும் இன்பம் வேண்டி இறைவனிடம் வழிபடுபவை. பின்னர் வந்த செவ்வியல் இலக்கியமாம்

இராமாயண பாரதம் போல்பவை மனிதனை இரக்கமற்ற ஊழ்வினையின் கைப்பாவை ஆக்கி, இந்தவுலகம் பெரியதளை அல்லது சிறை என்று கூறி, இதிலிருந்து தப்பிஓட வழி சொல்பவை. வேத காலத்தில் 'கர்மா' பற்றியோ, மறு பிறப்புப்பற்றியோ யாதும் இடம் பெறாதிருக்க, பிற்காலத்தில் அவையே தலைமையிடம் பெற்றன.

வி.கோபால அய்யங்கார், 'செவ்வியல் சமற்கிருத இலக்கியம்' (Classical Sanskrit Literature) என்ற தமது நூலில், மேலே சுட்டியவாறு ஆங்கிலத்தில் எழுதுவன இவை :

In the Vedic literature man appears as a strong and powerful agent capable of acquiring all amenities of life and prays to the gods for happiness both here and in the next world. In classical literature, man is a tool in the hands of a relentless Fate and the pleasures of the world are stigmatised as contributing to miserable bondage from which an aspirant after real joy must flee away. This is due to the absence of doctrines of Karma and reincarnation in the Vedic period and their active presence in the later ages. In the vedic literature man is always the exhorting and extolling petitioner and the gods are always the benign granters of their prayers; but in the calssical literature mortal and immortal characters are mixed up with an unrealistic exaggeration" (p.5)

வேதங்களைக் கீழ்ச்சாதியினர் படிக்கக்கூடாது என்று எழுதிவைத்தது ஒரு நன்மைக்கே. ஏனெனில் வேதங்களில் வரும் மெய்ம்மையியல் சார் உயர் சிந்தனைகளைவிட, தஸ்யூக்களையும் அரக்கர்களையும் - அவர்கள் தங்கள் வேள்விகளைச் செய்யவிடாது, பலவாறு இடையூறு

செய்வதால் அவர்களை அழிக்க உதவவேண்டுமெனக் கடவுளரிடம் முறையிடுவனவே பெரும்பகுதியாகும்.

பின்னர் வந்த நூல்கள் யாவும் ஒருவன் இழிந்த பிறப்பினனாகப் பிறப்பதற்கு, அவன் தலையில் எழுதப்பட்ட - வேதன் எனப்படும் பிரம்மாவால் எழுதப்பட்ட - கர்மாவே காரணம் என்றன.

'வருணாசிரம தருமத்தை' வற்புறுத்தாத ஒரு வடநூல் கூட இல்லை என்பதே பரிதாபத்திற்குரிய செய்தி.

வேதங்களின் இறுதி நான்காம் பகுதிகளை எழுதியவர்களும் பதினெண் புராணங்களை எழுதியவர்களும் புரோகிதர்களுக்கு நிலையான வாழ்வு அளிப்பதற்கான கட்டுக்கதைகளையும் அறவுரைகளையுமே எழுதிப் போயினர்.

இவையும் வேதயுகத்தின் சாரமே பின்பு விரித்து எழுதப்பட்டவையாகும். அதாவது வருணாசிரமம், கர்மா, வேள்விச் சடங்குகள் மூன்றும் இன்று ஏற்புடையன அல்ல. ஆனால் அவற்றைவிட்டு, வடமொழியைப் பிரிக்கமுடியாதவாறு, அதிலுள்ள உயர்ந்த சிந்தனைகள் முடங்கிக் கிடக்கின்றன.

இவற்றையும் நடுவுநிலை சார்ந்த, வடமொழி இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள், மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். வடமொழிக் குருக்கள்மார்களாம் புரோகிதர்கள் எழுதிவைத்த 'வியாக்கியானங்கள்' இவை என்பர். ஒவ்வொரு சாதியான் செய்யும் தீமைகளுக்கெல்லாம், இன்ன இன்ன பரிகாரம், இன்ன இன்ன ஹோமம், இன்ன இன்ன பிராயச்சித்தம் - கழுவாய்

என்பதே இந் நூல்கள் திரும்பத் திரும்ப உலகினர்க்குக்கூறும் அறிவுரைகள். இவை நாம் கூறுவன அல்ல. வடமொழியைப் பழுதறக் கற்றவர்கள் கூறுவன.

சமணமும் புத்தமும் இவ்வைதிக வருணாசிரமம், கர்மா, கொலைவேள்வி இவற்றை எதிர்த்துத் தோன்றியவையே. ஆயினும் கடும்துறவையும், விரதங்களையும் போதித்ததால் இவை செல்வாக்குப் பெறத் தவறின. வைதிகம் இதைப் பயன்படுத்தி, இச்சமயங்களை விழுங்கிச் செரித்துக் கொண்டது என்றே கூறலாம்.

இறுதியாக எஞ்சி நிற்பன 'இந்தியக் கலாச்சாரம்' என்ற பெயரால், கீழ்க்கண்டவையே (1) ஆன்மிகம் என்ற பெயராலும் 'சன்னியாசிகள்' என்ற பெயராலும் எவ்விதத் தவறும் செய்யலாம். அவர்கள் தொழத்தக்கவர்கள். பிறப்பால் உயர்ந்தவர்கள் பிராமணர்கள். இன்றும் காலமெல்லாம் 'தஸ்யூக்களை' - சூத்திரர்களை வெவ்வேறு பெயர்களால், புதுமை போற்றி அடிமைகளாகவே வைத்திருக்கலாம். (2) எவ்விதப் பாவத்திற்கும் பிராயச்சித்தம் பரிகாரம் உண்டு. அவ்வவற்றுக்கான அருச்சனைகள், ஹோமங்கள், வேள்விகள் பயன்படும். இன்று இவ் வேள்விகளில் உயிர்க்கொலை இல்லையே தவிர, மக்களுக்குப் பயன்படும் உடைகள், உணவுப் பண்டங்கள் அனைத்தும் போடப்படுகின்றன. இவ்வுலக மக்கள், கண்ணெதிரே பசித்திருக்க, கண் காணாத தேவர்களுக்கு இவை அக்கினி பகவான் வழியாக அனுப்பப்படுகின்றன. நினைத்தது நடக்க, செல்வம் பெருக, வீடுகட்ட, பிள்ளை பெற, மழை பெய்ய, உடல்நல வாழ்வு பெற இவை அனைத்தும் பயன்படும் என்ற

நம்பிக்கை வேரூன்றி, தழைத்துச் செழித்து, மேலோங்கி வருகிறது. இச் சடங்குகளால் ஒரு சிலர்க்கு வருமானம் பெருகலாம். வேறு பயன் இல்லை. (3) 'பத்திமை' என்பது தமிழரின் ஊற்றுக்கண். தமிழ்ப் பத்திமை இலக்கியமே, இந்தியப் பத்திமை இலக்கிய வெள்ளத்திற்கு ஊற்று என்று ஆய்வாளர் நிறுவியுள்ளனர். தமிழர்கள் 'நடுகல்' வழிபாடு தொடங்கி உருவ வழிபாட்டில் வளர்ந்தவர்கள். தமிழகக் கோயிற்கலையும் சிற்பத்திறன்களும், வடமொழியை உயிரெனப் போற்றும் வடநாட்டவர் கனவிலும் கண்டு கேட்டு அறியாதவை. அதே பத்திமை அடிப்படையில் எழுதப்பட்ட பெரிய புராணம், ஒவ்வோரடியாரும் 'பத்திமை' வீரத்தால் முத்தியடைந்தமை பற்றியே மொழிகிறது; எந்த அடியாரும் 'வேள்வி' செய்து, விண்ணுலக இன்பம் பெற்றதாக, அவர்களின் வரலாற்றில் குறிக்கவில்லை. ஆனால் வடமொழிப் புரோகிதர்கள், தமிழர்களின் இந்தப் பக்தியுணர்வைத் தங்களுக்கு வருமானம் தரும் வாணிகப் பொருளாக்கிக் கொண்டுவிட்டனர்.

இவர்கள் தங்கள் வாணிகம் போகுமே என்று தமிழைத் திருக்கோயில்களின் உள்ளேவிட மறுக்கின்றனர். ஆங்கிலவழிப் பள்ளியினர் தங்கள் வாணிகம் கருதியே, தமிழைப் பயிற்றுமொழியாக்க விடாமல் தடுக்கின்றனர். இசை வாணர்கள் தங்கள் குலச் சொத்தாக இருப்பதை, இழக்க விரும்பாததால், தமிழிசையை அறவே புறக்கணித்து, அதே சமயம் 'இசைப் பேரறிஞர்' எனப் பட்டமும் பெற்றுத் தழைக்கின்றனர்.

தந்தை பெரியார் அவர்கள் இவற்றை வேருடன் களையவே, பெரும் புரட்சிப் புயலாக வீசினார். அந்தோ,

அவர் வழியினர் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவரும், அதே 'பிற்போக்காளர்களின்' பின்னே சென்றும், பின்பாட்டுப் பாடி, அவர்களுக்கு 'ஆளாகி' அடிமைவலைப்பட்டு வருகின்றனர்.

இவ்வளவும் எழுதியது எதற்காக என்று எண்ணுகின்றீர்கள்? தமிழர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழிகாட்டியவரும், தமிழர்தம் நாகரிக அடையாள முகவரியைக் காக்க எண்ணியவருமான திருவள்ளுவரை நாம் வெளிப்படையாக - தெளிவாக நன்றாக - அழுத்தமாக விளங்கிக்கொண்டு அவர்வழி நடக்க வேண்டும் என்பதற்காகவேயாம்.

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று.
திருக்குறள் அறநூல் மட்டுமன்று.
திருக்குறள் வாழ்க்கை விளக்க நூல் மட்டுமன்று.

திருக்குறள் தமிழர் மரபுவழி வந்த நூல். அதற்கு முன்பு தோன்றிய தொல்காப்பியமும் சங்கநூல்களும் அடிப்படைச் சான்றாதாரங்கள்.

திருக்குறள் தமிழர் பண்பாட்டு நூல்; அடையாள நூல்; தமிழரை இனங்காட்டும் முகவரி நூல். அதற்கு அந்நூல் தமிழர் நாகரிகப் பண்பாட்டுப் பிழிவாக எழுதப் பெற்றிருப்பதே அடிப்படையாகும்.

திருக்குறள் புத்தமத நூலன்று; சமண நூலன்று; வைதிகச் சார்பு நூலுமன்று. அது தமிழர் மதநூல் - தமிழரின் சமய நூல். ஆனால் சமயம் என்று கூறாமல் 'மனிதம்' பற்றிப் பேசும் நூல். மடம் அமைக்காமல் மட அதிபதி ஆகாமல் குறிப்பிட்ட சீடர்களை உருவாக்காமல்

உலக மானுடத்தையே எதிர்நோக்கி அவர்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒன்றாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்.

சுருங்கச் சொன்னால் அது தமிழ்மறை; நிறைமொழி மாந்தராம் திருவள்ளுவர் அருளிய, மறைமொழியாகிய மந்திரம் அது.

திருக்குறள் உலகப் பொதுமறை. ஏனெனில் அது தமிழனின் இயல்பான உலகப் பொதுப் பார்வையைத் தன்னுட்கொண்டது. தமிழனின் பொதுமை நோக்கே அதில் படிந்துளது. தமிழ் இலக்கணம் தந்த, 'சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப்பெறாஅர்' என்ற செல்வம் அது. வழிவழிவரும் குடிப்பெருமை தவிரப் பிறப்பால் பேதத்தை எண்ணிப் பாராத தமிழனின் பண்பாட்டுக் கருவூலம் அது.

திருக்குறள் ஒன்றே பாரதத் தேசிய நூலாகும் தகுதியுடையது. திருக்குறள் இந்தியத் தேசிய நூலாக ஏற்கப்படுவது, இந்தியாவிற்கு நல்லது. இந்திய நாடு சிதறாமல் காக்கவல்ல சிறப்புக்கள் திருக்குறள் ஒன்றிலேயே உள்ளன.

திருக்குறள் தமிழர்தம் 'தேசியநூல்'; தமிழர்தம் நீதிநெறி வழியான சட்டநூல்; உறுதிமொழி எடுக்கும் 'பிரமாண' நூல் ஆகும். தமிழ் ஈழம் திருக்குறளின் படியான அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுக்கும் என்னும் செய்தி, மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும்.

திருக்குறள் பக்தி நெறிக்குப் புறம்பானதன்று. கடவுள் நம்பிக்கையைக் கூறுகிறது. கடவுள் இல்லை

என்பதும் இயற்கையே இறை என்பதும் எளிது. ஆனால் மக்கள் மனம் நம்பிக்கைப் பாறபட்டது. எதையேனும் சார்ந்தே இயங்குவது மனித மனம். கடவுள் இல்லை என்பதைவிட, மக்களுக்கு மாற்றுவழி காட்ட வேண்டும்.

திருக்குறள் இன்றைய ஆன்மிகத்திற்கு வேறுபட்ட ஒன்று. ஆன்மிகமும் சமயமும் நாம் செய்த பாவங்களைத் தீர்க்க எவ்வாறு உதவும்? பக்தியால் வருந்தித் தீர்த்துக் கொள்வது வேறு; பரிகாரம் தேடுவது வேறு.

நேர்மையான வழிபாடு மிகமிகக் குறைந்துவிட்டது. ஊழல்யுகம் ஆகிவிட்ட இன்று, மேலே கூறியவை மிகையெனப்படா.

திருக்குறள் குல ஏற்றத்தாழ்வு, வருணாசிரம தருமத்தை ஏற்கவில்லை. அதை மறுப்பதோடு, உயர்குலம் தாழ்குலம் என்பதற்கு அவரவர் ஒழுக்கமே நிலைக்களன் என நிறுவுகிறது.

'கர்மா' என்று சொல்லி, அவரவர் தலையில் இப்படி ஆகுக எனக் கடவுள் படைத்துவிட்டான் என்பதை வள்ளுவர் ஒப்பவில்லை. அடிமை வேலை செய்யவைத்து, இது உன் தலைவிதி என்பது காரியத்தைக் காட்டி, அதற்கு ஒரு காரணத்தைக் கற்பிப்பது. அதுதான் 'கர்மா' எனப்படுகிறது.

தமிழரின் சிவனிய வழிப்பட்ட வினைக் கோட்பாடு, ஒருவன் செய்யும் வினைக்குப் பயனுண்டு; விளைவுண்டு என்பது. இஃது அவனவன் செய்யும்

வினையால் தன்னை மாற்றிக்கொள்ளக் கூடியது. காரணத்துக் கேற்ற காரிய விளைவுண்டென்பது.

முன்னது காரியத்தைக் காட்டி, இதற்கொரு காரணமுண்டு - அது உனக்குத் தெரியாது - அது இறைவன் விதித்த விதி - உன் செயலின் பயன் என்பதோடு நீ நினைத்தாலும் உன்னைப் படைத்த நானே நினைத்தாலும் உன் இழிகுல நிலையை மாற்றமுடியாது என்பது

இந்த அடிப்படை வேறுபாடு உணரப்படவேண்டும்.

சடங்குவழிப் பிராயச்சித்தம், வருணாசிரம தருமம், கர்மா மூன்றுமே திருவள்ளுவர்க்கு உடன் பாடானவை அல்ல.

திருக்குறள் இன்றைய 'மதச்சார்பின்மை'யை (Secularism) அடிப்படையாகக் கொண்டது; பொதுவுடைமைத் தத்துவமாகிய சமதருமம் (Socialism) அதில் பேசப்படுகிறது; குடியாட்சி முறையையே அது முடியாட்சி அரசியலிலும் விளக்கிக் காட்டுகிறது. இந்நுட்பங்களை உணர்வோர், திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்கி, இறையாண்மையையும் இந்திய ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுவர்.

## இறையன்பின் பயன்கள்

இறையன்பால் தூய அறிவு பெறவேண்டும். அது நம் இடும்பைகளைத் தீர்க்கும். நம் மனக் கவலையை மாற்றும். நம்மை நிலமிசை நீண்டநாள் வாழவைக்கும். பிறப்பு எனும் தொடர்ச்சியை அறுத்துப் பேரா இயற்கையில் நிலைக்கவைக்கும்.

திருவள்ளுவர் இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட எதனையும், அதை விளக்கவேண்டுமென்பதற்காக விரித்துரைக்கவில்லை. மேலுலகம்; இரம்பை, ஊர்வசி போலும் அழகிய அவ்வுலகத் தேவதைகள்; காமதேனு கற்பகத் தரு தரும் வாழ்வுகள்; தேவ உலக அதிசயங்கள் - இன்பங்கள் - இவற்றை விளக்கவில்லை.

பக்தி என்பது மனவலிமை, உந்துதல், ஆக்கவழி முயற்சி, தன்னம்பிக்கை தரும் ஆளுமை, ஒழுக்கவழிச் சான்றாண்மை ஆகும். கவலைகள் தீர, நினைத்தவற்றை அடைய இறை வழிபாட்டுச் சடங்குகளில் ஈடுபடுவோர் அந்த நல் நம்பிக்கையால் வாழ்வு பெறுவர். ஆனால் அதையே பாவம் செய்யவும் செய்து தப்பிக்கவும் புரோகிதம் வழிகாட்டுகிறது. இதனை மாற்றினால் மட்டுமே, குறள் வழி வாழ்வு தழைக்கும்!

பிறப்பு நீக்கமே திருவள்ளுவர் வேண்டுவது. பேரா இயற்கையில் கலந்து நிலைபெறுதலே கடைசிக் குறிக்கோள். அதற்குமேல் எதையும் அவர் தொடவில்லை.

வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் (346), வானகம் (101), (மேலுலகம்), வானத்தவர்க்கு நல்விருந்து (86), வையத்தைவிட வானம் அண்மையில் வரும் (353), மறுமை (459), வானோர் (18), மேலுலகம் (222), என்று அவர் கூறுவன மக்கள் நம்பிக்கைப் பாற்பட்டன. அவற்றை விளக்க அவை வாராமல், அவற்றின் வழி, இவ்வுலகவாழ்வில் சிறப்புற்றால் வானுலகும் செல்லலாம், வானுறையும் தெய்வமுமாகலாம் எனத் தூண்ட மட்டுமே வருவன அவை.

புத்தேளிர் வாழும் உலகிற்போலப் பேரின்பமும் பெருஞ்சிறப்பும் பெறலாம் (58). புத்தேளுலகத்தும் கூட ஒப்புரவு போல ஒன்றைப் பெறுதல் இயலாது (213). இவ்வுலகப் புகழ் சிறந்தால், புத்தேள் உலகிலுள்ள தேவரையும் இங்குள்ளார் போற்றமாட்டார்கள் (234) களவாடார்க்குப் புத்தேள் உலகம் கிட்டும் (290). இகழ்வார்க்குத் தாழ்ந்து போவதால் புகழ் உண்டாகாது; அது புத்தேள் நாட்டுக்கும் உன்னைக் கொண்டு செல்லாது (966). புலத்தலால் பெறும் இன்பம் போலப் புத்தேள் நாட்டிலும் இன்பம் கிடையாது (1323).

திருவள்ளுவருக்கு புத்தேள் உலகமெனப்படும் மறுவுலக நம்பிக்கை உண்டா, இல்லையா என்பதன்று கேள்வி. அப்படி ஒன்று இருக்கலாம்; இல்லாமலும் போகலாம்.

மக்கள் நம்பிக்கை அது.

'உலகம் தழீஇயது ஒட்பம்' (நுண்ணறிவு) அல்லவா? உலகியலை வைத்துத் தாம் கூறவந்த அறத்தை அழுத்தமாய்ச் சொல்ல, அதைப் பயன்படுத்தும் உத்திஇது. அதுதான் 'மேலுலகம் இல்லெனினும்' என்று கூறிவிட்டாரே? தம்மால் விரும்பப்படும் காதலியைத் தழுவிப் பெறும் இன்பத்தைவிட, நீங்கள் சொல்கிறீர்களே 'சொர்க்கவாசல்' என்று, அந்தத் தாமரைக் கண்ணனின் துறக்கவுலகும் இனிதோ? எனக் கேட்கும்போது, திருவள்ளுவர் உள்ளத்தெளிவு புலப்படவில்லையா?

மறுமை, ஏழுபிறப்பு இவற்றில் அவர்க்கு நம்பிக்கையுண்டு. ஏழு பரம்பரையிலும் நம்பிக்கையுளது.

மறுமை, மறுபிறப்பை அடிக்கடி கூறுகிறார். இம்மறு பிறப்பினின்றும் விடுபடுதலே வீடு (விடுதலை). அதற்குமேல் அவர் ஏதும் குறிப்பிடாததற்குக் காரணம், வடமொழியிற்போலப் பொருந்தாத புனைகதைகளை ஆயிரம் ஆயிரமாகக் கூற அவர் விரும்பாமையேயாகும்.

## அறத்தால் வருவதே இன்பம்

பக்தி மனவலிமை தருவது. இறைவனிடம் பக்தி செலுத்துவது அன்புடைமையின் உச்சமாகும். பக்தியினால் எதையும் அடையலாம். **'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'** என்பார், நக்கீரர் திருமுருகாற்றுப்படையில். நீ நினைத்ததை - இன்னே - இப்பொழுதே, இக்கணமே பெறுவாய் என முருகனிடம் ஆற்றுப்படுத்துகிறார் அவர்.

மகப்பேறு வேண்டியும் மனையறம் சிறக்கச் செல்வ வளம் வேண்டியும் வழிபடும் மரபைப் பரிபாடலாலும் அறிகிறோம்.

திருவள்ளுவரும் 'நற்றாள் தொழவும்', 'பொருள் சேர் இறைவன் புகழை ஏத்தி ஏத்திப் பாடவும்'; அவ் இறையது திருவடியை இடையறாது நினைக்கவும் வேண்டுகிறார். இப் பத்திமையால் மனக் கவலை தீரும்; இடும்பைகள் நீங்கும்; தொழுவார் இந் நிலமிசை நீடுவாழ்வார் என்பார் அப் பேராசான்.

நாளும் இறைவனடி தொழுவார்க்கு நாளும் கோளும் ஏதும் செய்யா; அவர்கள் இவ்வுலகில் அரசாள்வர்; இது நமது ஆணை என்பார் திருஞான சம்பந்தர்.

பக்தி என்பது பூசனை. பூசனை என்னும் சொல் பூசுதல் என்பதிலிருந்து வந்தது. பூசுதல் என்றால் தூய்மை

செய்தல்; சுத்தப்படுத்துதல். 'வாய் பூசி வந்தேன்' என்ற பழங்கால இலக்கண எடுத்துக்காட்டிற்குப் பல்விளக்கி முகம் கழுவி வந்தேன் என்பது பொருள். இது மங்கல வழக்கு. திருக்கோயிலில் பூசனை என்பது கருவறை, இறைத்திருமேனியாம் சிலைகள் போன்றவற்றைச் சுத்தம் செய்தல் என்றே பொருள். அதுபோல மனஅழுக்கை நீக்கிச் சுத்தம் செய்தலும் பூசனையேயாம். அதற்கு மன ஓர்மையாம் தியானம், பாடிப் பரவுதல், வலம் வந்து வணங்குதல் எல்லாம் பயன்படும்; பயன்பட வேண்டும். பூசனையைப் பூசை (பூசு+ஐ) என்பதும் உண்டு. இது பூஜாவாக வடமொழியில் ஏறியது.

வடமொழிச் சொற்களைத் தமிழ் கடன் பெற்றதாகப் பட்டியலிட்டுச் சொல்வது வழக்கம். சமற்கிருத மொழியைக் கற்றபின், திராவிட மொழிப் பேரறிஞர்களாக வளர்ந்து, திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி ஒன்றைத்தொகுத்த எமனோவும் பரோவும் வடமொழி தமிழிலிருந்து கடன்பெற்ற சொற்களும் நூற்றுக்கணக்கின எனப் பட்டியலிட்டு விளக்கியுள்ளமை இங்கு நினைவுபடுத்தத் தக்கதாகும்.

பூசையால் மனம் தூய்மைப்படவேண்டும். 'மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்' என்பதனோடு ஒப்பிடின், மாசு இலனாதலே பக்தியுமாகும் என்பது பெறப்படும். அறத்தை உயிர்க்கு ஆக்கம் என்பார் திருவள்ளுவர்.'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்பது அவர் திருவாக்கு. பக்தியும் மக்களாகிய உயிர்கட்கு மன வலிமைதருதலால், இவை இரண்டிடையே வேறுபாடு

காண்பது இயலாது. அவ்வாறு நோக்கினால் ஆன்மிகம் என்பது நற்பண்பு. நற்செய்கை, நல்லொழுக்கமேயாகும்.

ஆனால் இன்றைய 'பக்திமார்க்கத்தின்' நிலைமை என்ன? புரோகிதம் தன் வருமானம் கருதி அதை முழுவதும் கெடுத்து ஒழித்துவிட்டது என்றே கூறவேண்டும்.

இன்சொல்லுக்கு மூன்று இலக்கணம் பார்த்தோமல்லவா? அது ஈரம் (அன்பு) கலந்திருக்க வேண்டும்; வஞ்சனை இன்றி இருக்க வேண்டும்; செம்பொருள் கண்ட சான்றோர் வாயிலிருந்து வரும் சொற்களாக இருக்க வேண்டும். பக்தி என்பதற்கும் இதைப் போலவே மூன்று இலக்கணம் கூறலாம். ஒன்று அன்புருவாக இருத்தல்; இரண்டு மன மாசின்றி இருத்தல்; மூன்று பக்தி செலுத்துவோர் தூய ஒழுக்கம் மிக்க சான்றோராகவும் இருக்க வேண்டும். இவ் அளவுகோலை வைத்துப் பார்த்தால் எத்தனைபேர் தேறுவர் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

கோயில்கள் வணிக நிலையங்கள் ஆகிவிட்டன. கொள்ளையடிப்போரும் வஞ்சகம் செய்வோரும் ஏமாற்றுவோரும் ஊழல் அரசியல் தலைவர்களும் இன்று கோயில்களையே தம் கூடாரமாக்கிக் கொண்டுவிட்டனர்.

எங்கள் ஊரில் ஒரு வாரிய ஊழியர். கையூட்டு வாங்காமல் பொதுமக்கள் நலனுக்குப் பாடுபட அவர் மனம் ஒப்பாது. நெற்றி நிறைய திருமண் இட்டு, பதின் மூன்றாவது ஆழ்வார் போல அவர் வரும்போது, கையெடுத்துத் தொழத் தோன்றும்; அவர் கையூட்டுக்குப் பேரம் பேசி நம்மை அலைய விடும்போது சவுக்கால்

அடிக்கலாமா என்று மனம் வேதனைப்படும். மற்றோர் அரசு ஊழியர் - நெற்றி நிறைய பட்டைதீட்டிய திருநீறு பளிச்சிடும். புருவ நடுவில் திலகம் வேறு. இவர் ஒரு நாயன்மாரோ என வணங்கத் தோன்றும். நம் தொலைபேசியில் ஒரு பழுதென்றால், அவர் நம்மையே பழுதாக்கிவிடுவதைப் பார்க்கும்போது நெஞ்சம் பதைபதைக்கும். சிவப்பழமாய் இருக்கும் நகராட்சி அலுவலர் முன் ஒரு வேலை கருதிப் போவீர்களானால், அவர் உங்கள் கையில் ஒரு திருவோடு தந்து, சிவனடியாராய்த் திருப்பியனுப்பும் திருத்தொண்டு செய்வதையே வாழ்வாகக் கொண்டிருப்பதை அறிவீர்கள். இன்று ஆன்மிகம் மன மாசு நீக்கமாய் உளதா? மன்னுயிர்க்கு ஆக்கமாய் உளதா? எந்த மடாதிபதியாவது, இவற்றை வற்புறுத்துகிறாரா? தங்கக் கிரீடமும் பொன்னும் பொருளும் காணிக்கையாகப் பெறுவதிலேயே நாட்டமுடைய இவர்கள் மனத்தூய்மை, அவாவின்மை, வாய்மை பற்றியெல்லாம் பேச ஏதாவது தகுதியுண்டா?

நாம் பக்தியைக் குறை சொல்லவில்லை. வள்ளுவர் சொன்ன கூடா ஒழுக்கமே, இன்று பக்தியாக நாடெங்கும், பரவியுளது. இன்று நாடு முழுவதும் போலிச் சாமியார்கள்; அரசியல் சாமியார்கள் செல்வத்துடன் விளங்கித் தோன்றுகின்றனர். கும்பாபிசேகங்கள் நடைபெறுகின்றன என்றும் கோயில்களில் பல கோடி வருமானம் குவிகிறதென்றும் பெருமைப்பட என்ன இருக்கிறது? அந்த அளவு குற்றமும் பழியும் பாவமும் பெருகியிருக்கிறது என்பதையே இது காட்டவில்லையா? அதாவது பக்தி பெருகுவதே, பாவத்தின் அடிப்படையிலிருந்து என்று போகலாமா?

எல்லாவற்றுக்கும் என்ன காரணம்? பக்தியைக் கெடுத்தது பக்திமான்களே. சமயத்தைப் பாழ்படுத்தியது சமயவாதிகளே. ஆன்மிகம் போலி ஆன்மிகப் புரோகிதத்தாலல்லவா அழிகிறது.

இறைவனிடம் இன்ன இன்ன வேண்டுமென இறைஞ்சலாம். அதில் தவறில்லை.

ஆனால் இன்றைய மாந்தரின் ஆழ்மனத்தில் குற்றம் செய்து தப்பிக்கலாம்; பாவம் செய்து பரிகாரம் தேடிவிடலாம் என்ற மனப்பான்மை மட்டுமே வளர்க்கப்பட்டுவிட்டது. மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டிய உண்மை இது. நடுநிலையாளர் இதை நன்குணர்வர்.

இதனால் பக்தி மன மாசை அகற்றாமல், மன அழுக்கை - மன நோயை மிகுவிக்கிறது. இன்றைய பக்தி ஒரு தொற்றுநோயாகிவிட்டதென்றால், என்மீது சீறிப் பாயாதீர்கள். வழிநடைப் பயணம் செய்து கடவுளர்க்குக் காணிக்கை செலுத்துவோர், தொகை நாளும் கூடுகிறது. இதில் மிகப்பலர் மன மாசு அறாத - பக்திப் போர்வைக்குள் தங்களை மறைத்துக்கொள்கிற பேர்வழிகளாகவும் இருப்பர். இவர்கள் இவ்வாறு செய்து பிறகு திருந்தினாலும் வரவேற்கலாம். மேலும் மேலும் பாவம் செய்ய, ஊழல் செய்ய, பிறர்க்குத் தீங்கு செய்ய அல்லவா, இந்தப் போலிப்பக்தி மன வலிமையைத் தருகிறது; உந்துதல் தருகிறது.

போலி ஆன்மிகம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

**அதனால்தான் திருவள்ளுவர் இறைவனை நற்பண்புகளின் உருவமாகவே அறிமுகப் படுத்தினார். வாலறிவன் - தூய அறிவினன். வேண்டுதல் வேண்டாமை இல்லாதான் - விருப்பு வெறுப்பற்றவன். மெய் வாய் கண் மூக்கு, செவி என்ற பொறி வாயில் ஐந்தையும் பக்குவப் படுத்தியவன். பொய்ம்மையற்ற ஒழுக்க நெறியினன். அறவாழி அந்தணன் - கருணைக்கடல். எண்ணிப் பார்க்கத்தக்க நல்ல குணம் எல்லாம் உடையவன் என்று மட்டுமே கூறினார்.**

வழிபாடு என்பது 'வழிப்படுவது'. இறைமை வழி நிற்பதே இறை வழிபாடு. உயிர்களும் வாலறிவை - தூய அறிவைப் பெறவேண்டும். விருப்பு வெறுப்பற்ற மனப்பக்குவத்தை அடையவேண்டும். ஐம்பொறிகளையும் அடக்கிப் பக்குவப்படுத்த வேண்டும். பொய்ம்மையற்ற ஒழுக்கமுடையவர்களாதல் வேண்டும். அதாவது போலித்தனம் கூடாது. உள்ளும் புறமும் உண்மையான ஒழுக்கம் வேண்டும். கருணைக் கடலாக விளங்க வேண்டும். எண்ணிப் பார்க்கத் தக்க எல்லா நற்குணங்களையும் பெற்றிடவேண்டும்.

அதுதான் வழிபாடு; அதுதான் பக்தி!

முன்சொன்ன இன்றைய போலி ஆன்மிகத்திற்கும் இப் பத்திமை சார்ந்த அறநெறிக்குமுள்ள அடிப்படை வேறுபாடுகள் இன்னுமா புலப்படவில்லை?

**'அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே' (437)**

என்ற திருமூலர், அன்பை முன்னிறுத்தி, அன்பே சிவம் என்றது, பண்பை முன்னிறுத்துவது அல்லவா?

திருக்கோயில்கள் வறுமையில் வாடவும் கூடாது. அங்கே பணம் குவிதலும் கூடாது. பணம் குவியுமிடத்தில் பக்தி எவ்வாறு நிலைபெறும் எனக் கேட்பார் திரு.வி.க.

அதனால் திருவள்ளுவர் ஒரு மடைமாற்று உத்தியைப் பயன்படுத்தினார். **'மடைமாற்று'** என்பது ஓர் உளவியல். துள்ளித் திரியும் துடிதுடிப்பான அடங்காத பையனை நாட்டுக் காவலர் படையில் சேர்த்துவிட்டால், அவன் பெருவீரனாக விளங்கித் தோன்றுவான். அவனைப் படிப்பில் விட்டால் ஒருவேளை தேறமாட்டான். அந்த அடங்காத் துடிதுடிப்பை, தீயவழியிற் போய்விடாது, படைப்பயிற்சியில் செலுத்துமாறு கவனத்தையும் கருத்தையும் மாற்றிவிடுவதே 'மடைமாற்று' ஆகும்.

புரோகிதம் ''பக்தியினால் செல்வம் கிடைக்கும்; இங்கே வாருங்கள்! நாங்கள் கடவுளின் முகவர்கள் - ஏசண்டுகள்; நாங்கள் இறைவனின் பிரதிநிதிகள்; உங்கள் கவலைகளை நாங்கள் தீர்ப்போம்; நீங்கள் செய்த - செய்யப் போகிற பாவங்கள் அனைத்தையும் நாங்கள் கழுவிட வழிகாட்ட வல்லவர்கள்; நாங்கள் பாவ மன்னிப்பு வாங்கித் தருகிறோம்; எங்களிடம் வாருங்கள்; கொஞ்சம் பணம் செலவழியுங்கள்; பிறகு நீங்கள் என்ன பாவம் வேண்டுமானாலும் செய்யலாம்; நாங்கள் சொல்லும் மந்திரங்களால் அவை யாவும் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும்; ஒரு ஹோமம், ஒரு யக்ஞம் செய்தால் பாவங்களைப் போக்கி, செல்வ வளங்களைப் பெற்று, இந்திரபோகத்தை இங்கேயே நுகரலாம்;

சொர்க்கலோக இன்பம் கிடைக்கும்'', என்று ஆசை காட்டிக்காட்டி, அவ்வாறு சடங்குகளை நடத்திநடத்தி நாட்டையும் வீட்டையும் பாழ்படுத்திவிட்டது. இவ்வாறு வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் நடப்பது இதுதானே? உள்ளார்ந்த உளவியல் இது; நோய் இது.

இந்திய நாடு இதனால் ஒழுக்கங்கெட்டுத் தடுமாறுகிறது.

இறைவன் அருகிருந்து பூசை செய்யும் குருக்களய்யா எனப்படும் சிவாச்சாரியார்கள் தமிழ்ப் பண்பாட்டு வழிவந்தவர்கள். அவர்கள் இனித் தமிழ்ப்பண்பாட்டைப் போற்றுவதே அவர்களுக்கு நல்லது. அடுத்து, பிராமணர்கள் எனப்படுவோர் அனைவரும் புரோகிதர்கள் அல்லர் அவர்களிலே பகுத்தறிவாளர் பலருள்ர். புரோகிதப் செய்வோர் தொகையும் குறைந்து வருகிறது. எனவே இக்கருத்துக்கள் இனி எல்லோருக்கும் ஏற்புடையனவே எனலாம்.

ஏன்? இந்தியா பிற பல தீயவற்றால் சீரழியவில்லையா? திரைப்படம் கெடுக்கவில்லையா? மதுப்பழக்கம் கெடுக்கவில்லையா? - இவ்வாறு வினவுவர்.

உண்மையே. ஆனாலும் போலி பக்தி என்பது ஆழ்மனத்தைக் கெடுப்பது. இதற்குப் புற்றுநோயையும் 'எய்ட்ஸ்' எனப்படும் ஆட்கொல்லி நோயையுமே உவமை கூறலாம். மேலும் இது ஒரு தொற்றுநோயாய் ஒருவரைப் பார்த்து ஒருவரிடம் பரவுகிறது. வெளியே தெரியாமல் உள்ளுள் இருந்தே அரித்து அழிக்கும் நோய் போன்றது இது.

**இதனால்தான் கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக அடிகளார், திருக்குறள் மாநாட்டில், 'ஒழுக்கமாய் நடந்தால் கோயிலுக்குக் கூடப் போக வேண்டாம்' என்றார்கள். ஒழுக்கம்தான் பக்தி - ஒழுக்கம் தான் ஆன்மிகம்; இதை மக்கள் உணர வேண்டுமென விளக்கினார்கள்.**

திருவள்ளுவர், அறநெறி வாழ்வாலேயே செல்வமும் சிறப்பும் கிடைக்கும் என்றார். ஒருவன் எய்தவேண்டிய அனைத்து நலன்களையும் இன்பங்களையும் செல்வங்களையும் அறமே தருமென்றார் திருவள்ளுவர். மக்கள் எவ்வெவற்றைப் பக்தி தரும் என்று நம்புகிறார்களோ, அவை அனைத்தையும் அறம் தருமென அவர் திரும்பத் திரும்பக் கூறியுள்ளார். இம்மை மறுமை; புத்தேளிர் உலக இன்பம் எல்லாம் ஒழுக்கத்தால் - பண்பால் - சான்றாண்மையால் இவ்வுலகிலேயே, இப்பொழுதே கிடைக்கும் என்றார்.

**சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)**

**அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்**
**புறத்த புகழும் இல (39)**

அறமல்லாத வழிகளிலும் இன்பம் கிடைக்குமென்பதைத் திருவள்ளுவர் மறுக்கவில்லை. ஆனால் அவை 'புறத்த' - அதாவது இன்பப் போலிகள் - போலி இன்பங்கள்! உண்மையான இன்பங்களல்ல அவை.

கொசுக்கள் பறக்க, தேங்கிக் கிடக்கும் சேறு நிறைந்த கெட்ட நாற்றம் வீசுகிற சிறு குட்டைகளில் கிடந்து, திளைத்து எருமை இன்புறுவதைப் பார்க்கிறோமல்லவா?

சிலர் அறநெறி தவறி நுகரும் இன்பம், இது போன்றதேயாம். மேலும் அதனால் இகழ்ச்சியே பெருகும். பலரும் காறித் துப்புவர். 'புகழும் இல' என்றதன் நுட்பம் இதுவே.

அறத்தால் அடையும் இன்பங்களே எழுமை எழுபிறப்பும் தொடருமாம். பழிபிறங்காப் பண்புள்ள மக்களைப் பெற்றால், எழு பிறப்புக்கும் தீயவை அருகிலும் வாராதாம் (62). விருந்தினரை உபசரித்து, எஞ்சியதையே உண்பதென்ற மனமுடையவன் நிலத்தில், விதைக்காமலே நெல்விளையுமாம் (85). விதையூன்றாமலே விளைவு தருமென அறநெறிப் பயன் கூறப்படுவது, இளையான்குடி மாற நாயனாரை நினைப்பூட்டவில்லையா?

பக்தியால் மட்டுமா முத்தி - மோட்சம் - வீடுபே வானுலகம் கிடைப்பது? விருந்து புறந்தரும் அறத்தாலு ஒருவன் வானுலகத்தவரால் தம் விருந்தினனா வரவேற்கப்படுவானாம் (86). இவ்வாறு குறள்நூல் முழுவதும் அறநெறி வாழ்வுப் பயன்கள், உலகியல் பார்வையுடன் கூறப்படுகின்றன.

பிறரெல்லாம் பக்தியால் எல்லாம் கிடைக்குமென்றதை, நம் பேராசான் அறநெறியால் கிடைக்குமென்கிறார். மற்றவர்கள் பக்தி, சடங்குகளால் மட்டுமே கிடைக்குமென ஆசைகாட்டிய 'சொர்க்கவுலக' இன்பம், கிடைத்தற்கரிய நற்பேறுகள் எல்லாம் அறம் பிறழாத வாழ்வால் அமையுமென்பார் நம் தெய்வத் திருவள்ளுவர். இதன் கருத்து யாது? அவர் காலத்திலேயே போலித் துறவு, போலிப் பக்தி பரவி, குருமார் என்னும் புரோகிதர்களால் தம் வருமானம் கருதி, தவறான வழிகாட்டப்பெற்று, குருட்டு ஆசாரங்கள், சடங்குகளில்

மூழ்கி மானுடம் மயங்கிக் கிடந்தது. அதை மடைமாற்றி நல்வழிப்படுத்தவே, அவை கூறிய அத் தேவ உலக இன்பமனைத்தும், அறநெறி ஒழுக்கத்தால் மட்டுமே அமையுமென வற்புறுத்த வேண்டியதாயிற்று. அங்கே போயடைவதை யார் அறிவார்? அவற்றை இங்கேயே அடையலாம் என அழுத்தமாய் விரிக்க வேண்டியதாயிற்று.

சிலர் வினவுகின்றார்கள். திருக்குறள் படிப்பதால் வாழ்க்கைக்கு என்ன பயன்? இதுவரை ஏதாவது, யாருக்காவது பயன் விளைந்ததாகக் காட்டமுடியுமா? யாரேனும் பெரும் தொழிலதிபர் திருக்குறள் படித்ததால் நான் செல்வனாக ஆனேன் என்று கூறியிருக்கிறாரா? திருக்குறள் அன்றாட வாழ்க்கைச் சிக்கலை அவிழ்க்க, தீர்க்கப் பயன்பட்டிருக்கின்றது என்று மெய்ப்பிக்க முடியுமா?

திருக்குறள் படித்தால் நல்ல மனைவி வாய்ப்பாளா? சுகமான, இன்பமான மனையறம் வாய்க்குமா? அவ்வாறு யாரும் பெற்றதாகக் காட்டமுடியுமா?

திருக்குறள் படித்தால் நல்ல குழந்தைகள் பிறப்பார்களா? இறைவனிடம் பிள்ளை இல்லாதவர் மகப்பேறு வேண்டி, நோன்பிருந்து, பின்பு மகப்பேறு வாய்த்ததாகக் கூறுகிறார்களே?

திருக்குறளால் அவ்வாறெல்லாம் வாய்க்குமா? இதுவரை வாய்த்ததுண்டா?

திருக்குறள் மனக் கவலைகளைத் தீர்க்குமா? திருக்குறள் ஊழ்வினையை வெல்ல உதவுமா?

திருக்குறள் படிப்பதால் கடன் தீருமா? துன்பமான காலம், அதிகச் சிரமம் தராமல் கழியுமா? வறுமை நீங்குமா? வாட்டம் போகுமா?

இவை பல பக்தியால்தானே முடியும்?

உண்மைதான்! உண்மையான, உறுதியான பக்தி என்பது அறநெறி ஒழுக்க வாழ்வேயாகும். **இதில் நம்பிக்கையே வாழ்வு தருகிறது.** திருக்குறள் மூடநம்பிக்கையை மடைமாற்றி, நல்லதொரு, தன்னம்பிக்கை, தன்முயற்சி, தன்னீகம், உழைப்பில் நம்மைச் செலுத்தி இவை அனைத்தையும் அடைய வழிகாட்டுகிறது. இம்முயற்சியால் 'கூற்றையும் வென்று வாழலாம்' எனக் குறள் வழிகாட்டுகிறது.

அறநெறியில் நம்பிக்கை வைப்பதால், அதுவே தூய பக்தி நெறியாகும். அறநெறிவேறு, பக்திநெறி வேறு அல்ல.

இரண்டும் நாணயத்தின் இருபக்கங்கள் கூட அல்ல; இரண்டும் ஒன்று. 'அன்பும் சிவமும்' ஒன்றே என்ற திருமந்திரத் தொடரை உன்னுக. உண்மையான ஒழுக்கம்தான் பக்தி; பக்தி உண்மையான ஒழுக்கமே.

திருக்குறள் பொருள்செயல்வகை அதிகாரத்தைப் படிக்கப் படிக்கச் செல்வம் பெருகும். குடிமை, குடிசெயல்வகை அதிகாரங்களை ஓதஓத, அதன்வழி நடக்கநடக்கக் குலம், குடி தழைக்கும். மக்கட்பேறு அதிகாரத்தைப் படித்தால் குழந்தை பிறக்கும்.

இடுக்கண் அழியாமையைப் படித்தால் துன்பம் விலகும். பகையை வென்று வாழலாம்; பகைவரின்

படையை வென்றும் வாழலாம். தவ அதிகாரத்தைப் படித்தால் கூற்றையும் ஆடல் கொள்ளலாம்.

தெய்வ உலக இன்பத்தை இங்கேயே பெறலாம். தேனினும் ஆற்ற இனிய அமிழ்தமனைய காதலின்பத்தை இங்கேயே நுகரலாம். இவ்வுலகிலேயே, கற்பனையுலகில் கூறப்படும், 'தேவலோக' இன்பமனைத்தையும் எய்தலாம்!

எழுபிறப்பும் தீயவை தீண்டா; மனநலமே மன்னுயிர்க்கு ஆக்கம்; புத்தேளிர் உலகச் சிறப்பு இங்கேயே கிடைக்கும்; ஏன்? மானுடன் வானுறையும் தெய்வமே ஆகலாம்!

இன்றைய உண்மையான ஆன்மிகவாதிகள், ஒழுக்கசீலர்கள், மனமாசற்ற பக்திமான்கள் பதற்றப் படவேண்டாம். இங்கே ஆன்மிகத்தின் மறுபக்கம், ஒழுக்கத்தைத் தவறவிடுவதை மட்டுமே சுட்டிக்காட்ட வேண்டியதாயிற்று. குறள் வழிவாழ்வுக்கு இவ்விளக்கம் தேவைப்படுகிறது.

**திருக்குறள் நோன்பு** என்னும் நூலில், திருக்குறள் படிப்பதால் பெற்ற - பெறுகின்ற - பெறக்கூடிய நலன்கள் யாவும் விளக்கப் பெறும். அதையும் கற்றுத் திருக்குறளை நம் வாழ்வு நூலாக்குவதே, நமது முதற்கடமையாகும்.

✦✦✦

சிந்தாமணிச்

செல்வம்